Chundikuli Branch Library
Chundikuli Branch Library
9/111-CA

Registered as a Newspaper பக்கங்கள் 12 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 01 [17-09-1993] வெள்ளிக்கிழமை ஓசை 211

## மாணவர் மதிய உணவு நிறுத்திவிட முடிவு

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த இலவச மதிய உணவுக்கான முத்திரையை நிறுத்திவிட அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாக அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதற்கான முடிவு அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் நாளாந்தம் 7.2 மில்லியன் ரூபாவை மீதப்படுத்த முடியும் எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினால் (12ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு - காலிமுகத் திடலில் அதிகாலையில் தமிழர்கள் கைது

## 200 புலிகள் ஊடுருவி உள்ளனராம்

(கொழும்பு)

கொழும்பு காலிமுகத்திடலில் அதிகாலை உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த சுமார் 30 தமிழ் இளைஞர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் அரச உத்தியோகத்தர்கள்.

இதேவேளை கொழும்பில் தற்கொலைத் தாக்குதல் மற்றும் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்துவதற்கு நன்கு பயிற்சி பெற்ற 200 விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் ஊடுருவியுள்ளதாகவும் இவர்கள் சிறிலங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டாவிஜேதுங்கா மீதும் ஏனைய அரசியல் பிரமுகர்கள் மீதும் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் சிறிலங்கா புலனாய்வு தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த திங்களன்று கொழும்பு காலிமுகத் திடலில் அதிகாலை உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்தவர்களை திடீரென சுற்றிவளைத்த பொலிசார் அவர்களில் தமிழர்களை மட்டும் வேறுபடுத்தி கைது செய்து கொண்டுசென்றனர்.

இவர்களில் அநேகர் அரச உத்தியோகத்தர்கள் எனவும் இவர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்பில் தற்கொலைத் தாக்குதல், மற்றும் வெடிகுண்டுத் தாக்குதல் பயிற்சிபெற்ற சுமார் 200 விடுதலைப்புலிகள் ஊடுருவியுள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்து சிறிலங்கா ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவுக்குத் தீவிர பயிற்சி பெற்ற பாதுகாப்புப் பிரிவு ஒன்று மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டு சிறிலங்கா ஜனாதிபதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. புலிகள் தாக்குதல் மேற்கொள்ளலாம் என்றே (12 ஆம் பக்கம் பார்க்க)

## 72 வயதுக்கு உட்பட்டோரை ஆங்கில ஆசிரியராக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தற்போது நிலவும் ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக்குறையைப் போக்க யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளருக்கு கல்வியமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் ஆங்கிலம் கற்பித்தலுடன் திறமையுள்ளவர்கள் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்க அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதற்கமைய 72 வயதிற்கு உட்பட்ட மேற்படி தகைமையுடையோரை சேவையில் அமர்த்த கல்வியமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இனி யாழ். மாவட்ட பாடசாலைகளில் ஆங்கிலம் மற்றும் விவசாயம் முக்கிய பாடங்களாக கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (பா)

## இரு வயோதிபர்கள் தாண்டிக்குளத்தில் தடுப்பு

[வவுனியா]

வடபகுதியைச் சேர்ந்த இரு குடும்பஸ்தர்கள் தாண்டிக்குள தடைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி மன்னாரைச் சேர்ந்த 60 வயதான முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் 58 வயதான பெண்மணி ஒருவருமே சிறிலங்கா இராணுவத்தினரால் தாண்டிக்குள தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

## மட்டு. வாவியில் சென்ற 2 படையினர் மூழ்கிப்பலி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு வாவியில் இரண்டு சிறிலங்கா இராணுவத்தினர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளனர். இவ் வாவியில் படகுகள் மூலம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினரே இவ்வாறு நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளனர்.

## செங்கலடி ராணுவ முகாமில் இளைஞர் சுட்டுக்கொலை

(செங்கலடி)

செங்கலடி இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தின் போது எஸ். ரி. கிருபைராஜா என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

## ரெலோ துரோகிகளால் குடும்பஸ்தர் கைது

மட்டக்களப்பு நாவற்காட்டைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் ரெலோதேசத்துரோகிகளால் கைது செய்யப்பட்டு மட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு கடந்த 13ஆம் திகதி ரெலோ துரோகிகளால் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர் மூன்று பிள்ளைகளின் தந்தையான தங்கராசா இராசரட்ணம் (வயது30) எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வீரச்சாவு



லெப். தெய்வேந்திரன்

நேற்று முன் தினம் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட விபத்தொன்றில் காயமடைந்திருந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் நேற்று வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் தெய்வேந்திரன் (தர்மலிங்கம் விக்னேஸ்வரன் சென்றல் வீதி, திருமலை) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## பாடசாலை சிற்றூழியர் யாழ். இல் நேர்முகப்பரீட்சை

(நமது நிருபர்)

தேசிய பாடசாலைகளில் உள்ள சிற்றூழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கல்வியமைச்சிற்கும் மற்றும் வடகிழக்கு மாகாண கல்வியமைச்சிற்கும் விண்ணப்பித்தோருக்கான நேர்முகப்பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறப்வுள்ளன.

இத்தகவலை யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் எமது அலுவல நிருபருக்கு தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சிற்கு விண்ணப் (12ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கான தற்காலிக உதவி விரிவுரையாளர்கள், கட்டுரையாளர் பதவிக்கான நேர்முகத் தெரிவு நடைபெறவுள்ளது.

இதற்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கடிதங்கள் இன்னமும் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் தகுந்த ஆவணங்களுடன் கலைப்பீடாதிபதியின் அலுவலகத்தில் சமுகமளித்து (12ஆம் பக்கம் பார்க்க)

"விடுதலைப் புலிகள் வாழவேண்டுமென்றோ ஆளவேண்டுமென்றோ ஆசைகொள்ளவில்லை. எமது மக்களின் நிரந்தரமான சுபீட்சமான எதிர்காலம் கிடைக்குமானால் நாம் அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம்."

–திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

(வி/7435)

## திலீபன் நினைவு நிகழ்வுகளில் பெருமளவு மக்கள் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசிய விடுதலைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நாட்களையொட்டி இரண்டாவது நாளாக நேற்றும் அஞ்சலி நிகழ்வுகள் யாழ். குடாநாடெங்கும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன.

தாயக விடுதலைப் போராட்டத்துக்கு தடைக் கல்லாக இருந்ததுடன் தமிழீழ தேசிய இனத்தை அடக்குமுறைக்குட்படுத்திவந்த இந்திய இலங்கை அரசுகளின் சதிச் செயலை உலக அரங்கில் அம்பலப்படுத்திய தியாகி திலீபனை நினைவு கூருவதற்கும் அஞ்சலி செலுத்துவதற்கும் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கும் நினைவுப் பந்தல்களுக்கு மக்கள் சென்று திரும்புகின்றனர். அத்துடன் வட்டப் பிரிவு ரீதியாக அமைக்கப்பட்டிருக்கும் அடையாள உண்ணா (12 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### யோத்தல் தேவை

ஹொர்லிக்ஸ், விவா போத்தல்கள் மூடியுடன்; ஜாம், சோஸ், பியர் மற்றும் கோடியல் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படும். விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி ரேஸ்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட், 14 சினியர் ஒழுங்கை யாழ்ப்பாணம்.
(சி7400)

### புலமைப் பரிசில் பரீட்சை

1994 புலமைப் பரிசில் மாணவருக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் பி.ப 3 மணிக்கு நடாத்தப்படும் தொடர் பயிற்சிப் பரீட்சையின் 10-வது பரீட்சை 18.09 1993 சனிக்கிழமை (நாளை) பி.ப 3 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் பெற்றுக் கொள்ளலாம். எடிசன் அக்கடமி யாழ் இந்து அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(6042)

### வாங்குகிறோம்

துப்பரவான வேப்பம் விதை வேப்பம் கோது, இலுப்பம் விதை, விலைக்கு வாங்குகிறோம்.- ''மில்க்வைற்''
(சி/7428)

### ஆண்டு 4 புலமைப் பரிசில்

ஆண்டு 4ற்கு தொடர் பரீட்சை 19-09-93 ஞாயிறு மு.ப 8.00, 11.00 நடைபெறும். வினாத்தாள்களையும்பெற்றுக் கொள்ளலாம். தூர இட மாணவருக்கு சனி ஞாயிறு வகுப்புகள் 18-09-93 சனி 4.00-6.00 ஆரம்பமாகும் புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (6037)

### விற்பனைக்கு

ஆர்கனான், மெட்டீரியா மெடிக்கா இரண்டு பாகங்கள், பயோகெமிஸ்டிரி வைத்திய முறை ஆகியன இலங்கை ஹோமியோபதி சபையின் பாடத்திட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டது. இடைக்கும் இடம் வட இலங்கை ஹோமியோபதி சங்கம் 35 நாவலர் வீதி யாழ்ப்பாணம் (5910)

### தலைமைத்துவ பயிற்சி நெறி

யாழ். பிரதேச உள்ளூராட்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ் மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களுக்கு ஆரம்பிக்கப்படவுள்ள தலைமைத்துவப் பயிற்சிநெறி அக்டோபர் மாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாக உள்ளதாக யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அறிவித்துள்ளார். (24)

### சிறுவர்களுக்காக

★ வரதர் கதைமலர்-1
**அவன் பெரியவன்**
அநு வை நாகராஜன் எழுதியது.

★ வரதர் கதைமலர்-2
**இராமன் கதை**
(இராமாயணம்)
'சம்பந்தன்' எழுதியது

ஒவ்வொன்றும் ரூபா12/-

விற்பனையாளரிடம் கேளுங்கள்
(6029

# பிரேமாவெளிநாட்டுபயணம் 23.3 மில்லியன் ரூபா செலவு

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா தமது வெளிநாட்டுப் பயணங்களின்போது செலவிட்ட மொத்த தொகை 23.3 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது ஜேர்மனி, பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவு, பூட்டான், இந்தியா ஆகிய நாடுகளுக்கு ஜனாதிபதி விஜயம் செய்யும் போது தமது மனைவி ஹேமா மற்றும் புகைப்படக்காரர்கள், செய்தியாளர்கள், அதிகாரிகள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் எனப் பெரியதொரு குழு சென்று வந்தது தெரிந்ததே.

பாராளுமன்றத்தில் சுயேட்சை எம்பியான நிமால் சிறிபால டி. சில்வா எழுப்பிய கேள்வி யொன்றுக்கு பதிலளித்த அமைச்சர் விமல் விக்கிரமசிங்க தெரிவிக்கையில் 23.3 மில்லியன் ரூபா ஜனாதிபதியின் வெளிநாட்டு விஜயங்களின்போது செலவிடப்பட்டதாக தெரிவித்தார்.

## மக்கள் மயமாக்கப்பட்ட டிப்போக்களும் நஷ்டம்

(கொழும்பு)

வட மத்திய மாகாணத்தில் மக்கள் மயமாக்கப்பட்ட ஐந்து போக்குவரத்துச் சபை டிப்போக்களில் நான்கு நஷ்டத்தில் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஆறு மாதங்களில் 4.8 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாம்.

நஷ்டத்தில் நடைபெறும் டிப்போக்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு இனி வரும் மாதங்களில் சம்பளம் வழங்குவது குறித்துச் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை மக்கள் மயமாக்கப்பட்ட 97 பஸ் டிப்போக்களில் 87 நஷ்டத்தில் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் போக்குவரத்துச் சபை டிப்போக்களிலிருந்து நிறுத்தப்பட்ட 40 000 போக்குவரத்துச் சபை ஊழியர்கள் இதுவரை ஊழியர் சகாய நிதியைப் பெற முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஜனாதிபதி

தொடர்ச்சியான தோல்விகளைச் சந்தித்தது. இதில் பெரும் உயிர் மற்றும் தளபாட இழப்புக்களையும் இராணுவம் சந்தித்தது. அத்தோடு பாரிய முறை யுக்திகளையும், முலத்தந்திரோபாயங்களையும் மாற்றவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருந்தது.

மேலும் இன்றுள்ள தளபதிகள் யாவருக்கும் விடுதலைப் புலிகளுடனான போரில் போரிடும் சந்தர்ப்பம் முன்னரே வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை, ஆகையினால் தற்பொழுது அவர்களுக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பமானது முன்னரைவிட சற்று விரிவான நடவடிக்கைக்கு வாய்ப்பை வழங்கினும் இது அவர்களுக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பம் என்பதைவிட சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா தமிழரின் தேசிய இனப் போராட்டத்தை ஆயுதமுனையில் வெற்றிகொள்ளும் தனது விருப்பத்திற்குவழங்கிய சந்தர்ப்பம் என்றே கூறுதல் பொருத்தமானதாகும்.

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கப்புது கிளை பாவனையாளர்களுக்கு

## ஒரு வேண்டுகோள்

கப்புது கிளை முகாமையாளரின் வருடாந்த இடமாற்றத்தில் ஏற்பட்ட நிலைமையினால் பூட்டப்பட்டுள்ளது. கப்புது கிளையின் பாவனையாளர்கள் தங்களுக்கு நாளாந்தம் தேவையான நுகர்வுப் பொருட்களை அயலில் அமைந்துள்ள அந்தணத்திடல் கிளையில் பெற்றுக் கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாவனையாளர்களுக்கு இதனால் ஏற்படும் சிரமங்களுக்காக சங்கத்தின் பணிப்பாளர் சபை மனம் வருந்துகின்றது என்பதையும் அறியத்தருகின்றோம்.

பொது முகாமையாளர்
1993.09-15 உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்
(7439)

சகலதுறை வர்த்தகர்களுக்கும், ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் யாழ். வர்த்தகர் சங்கம் விடுக்கும்

## ஓர் முக்கிய அறிவித்தல்

இந்தியப் படை நம் தமிழ் இன மக்களுக்கு இழைத்த கொடுமைகளை தாங்காது துயர் கொண்டு எம் மக்களுக்காக, எம் மண்ணுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 15-09-87 தொடக்கம் 26-09-87 வரை நல்லூர் கந்தசாமி கோவில் வீதியிலே உண்ணாவிரதம் இருந்து ஈகைச்சாவு அடைந்த தியாகி லெப். கேணல் திலீபனின் 6ஆம் ஆண்டு நினைவு கூரும் முகமாக வருகிற 18.09.93 சனிக்கிழமை சகலதுறை வர்த்தகர்களும், ஊழியர்களும், பொது மக்களும் தங்கள் வர்த்தக ஸ்தாபனங்களைப் பூட்டி யாழ். வர்த்தகர் சங்கப் பணிமனையில் காலை 7.00 மணிக்கு ஒன்றுகூடி ஊர்வலமாக புறப்பட்டு நல்லூர் வீதியை சென்றடைந்து அங்கு 7-30 மணிக்கு உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்படும். அதில் தவறாது சகலதுறை வர்த்தகர்களும், ஊழியர்களும், பொதுமக்களும் ஊர்வலத்தில்கலந்து உண்ணாவிரதத்தை சிறப்பிக்குமாறு சங்கத்தின் சார்பில் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்
யாழ். வர்த்தகர் சங்கம்
(5952)

வீதிகள் அபிவிருத்தி திணைக்கள

# பருத்தித்துறை அலுவலகம் உடன் திறக்கப் பணிப்பு

(பருத்தித்துறை)

வீதிகள் அபிவிருத்தி திணைக்களம் யாழ்ப்பாண அலுவலகத்துடன் இணைந்து செயற்பட்டுவரும் வீதிகள் அபிவிருத்தி திணைக்கள பருத்தித்துறை அலுவலகத்தை உடனடியாக பருத்தித்துறையிலேயே திறந்து செயற்பாடுகளை மேற்கொள்ளும்படி வடக்கு கிழக்கு மாகாணசபை வீதிகள் அபிவிருத்தி திணைக்கள யாழ் பிரதம பொறியியலாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறையில் இயங்க வேண்டிய வீதிகள் அபிவிருத்தி திணைக்கள அலுவலகம் திறக்கப்படாமையினால் இப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றி வராத்துப்பளை சனசமூக நிலையம் வடக்கு கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர் வடக்கு, கிழக்கு மாகாண சபை பொறியியல் சேவைகள் அமைச்சு செயலாளர் ஆகியோருக்குச் சுட்டிக்காட்டிபுகார் செய்ததையடுத்தே வடக்கு, கிழக்கு மாகாண சபை இவ் அலுவலகத்தைத் திறந்து வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இத்திணைக்கள அலுவலகத்தைப் பருத்தித் துறையில் திறப்பதற்கான கட்டடத்தை வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீநிவாசன், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் திரு. சி. முருகேசபிள்ளை ஆகியோர் தெரிவு செய்து ஒப்படைக்கச் செய்துள்ளனர். வெகு விரைவில் வீதிகள் அபிவிருத்தி திணைக்கள பருத்தித்துறை அலுவலகம் திறந்து வைக்கப்பட்டு செயற்படத் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

## நினைவு கூருகின்றோம் ... 1993-09-17

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் எமைப் பிரிந்த,

**பீற்றர்** (சுப்பையா குமாரவேலு - குமாரவேலு வீதி, அரியாலை - யாழ்)

1987ஆம் ஆண்டு திருமலை - அநுராதபுரம் வீதியில் வீதிமறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொது மக்கள்மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்

1989ஆம் ஆண்டு இந்தியப்படையினரால்படுகொலை செய்யப்பட்ட இளம் குடும்பத் தலைவி.

1990ஆம் ஆண்டு மட்டு - குருக்கள்மடம் பகுதியில் எமது முகாம் ஒன்றை சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்தபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**அலி** (கனகலிங்கம் கரன் - முள்ளிப்பொத்தானை - மட்டு)

கடலானையில் கொறி வெடியில் சிக்கிய நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கப்டன் திலகன் / அண்ணாச்சி** (வி. இராமச்சந்திரன் - குஞ்சப்பந்திடல், தம்பலகாமம் - திருமலை)

கடலானையில் எமது முகாமை சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்துத் தாக்கியபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**தீபன் / திலீபன்** (சண்முகவடிவேல் செல்வநாயகம் - தம்பலகாமம் - திருமலை)

யாழ் - கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்றுவரும் போது வீரச்சாவெய்திய,

**லெப். ரேகா / பட்டு** (கவிதா சங்கரப்பிள்ளை - மானாவளை, மட்டுவில் கிழக்கு-சாவகச்சேரி)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூர், ஐயங்கேணி, தளவாய், ஆறுமுகத்தான் குடியிருப்புப்பகுதிகளைச் சேர்ந்த பெண். 02 இளைஞர்கள் உட்பட 5 தமிழர்கள். சிறிலங்காப்படையினரின் நடவடிக்கைகளினால் காணாமல் போன பழைய கல்முனையைச் சேர்ந்த தமிழ் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**குகநேசன்** (ஆறுமுகம் ராசன் - இத்தாண்டி, கொறக் கொட்டாஞ்சேனை - மட்டு)

**2ம் லெப். மில்ராஜ்** (வைரமுத்து விஜேந்திரன் - இலிவெட்டி, மூதூர் - திருமலை)

**அறிவழகன்** (சுப்பிரமணியம் வேலாயுதம் - 52, இலிதொச்சி கிழக்கு)

சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப்பிரிவின் 3- வது தளபதி

**லெப். கேணல் ஜஸ்ரின்** (பொன்னுச்சாமி பாஸ்கரன் - தையிட்டி, காங்கேசன்துறை யாழ்)

**லோறன்ஸ்** (முருகேசபிள்ளை தயேந்திரன் - கன்னாகம் வீதி, சிந்துசெட்டி, புத்தூர் மேற்கு -யாழ்)

**சுரேன்** (சந்திரசேகர் சுரேஸ்குமார் -ஐயனார் கோவிலடி, சுன்னாகம் யாழ்)

1992ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த,

**மகேஸ்வரி** (ரஜனி முத்துக்குமார் - பொன்னம்பலம் வீதி, அரியாலை - யாழ்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[இ-7433]

# இசுலாமிய அடிப்படை வாதத்தின் பரிசோதனைக் களமாக சூடான்

**பாலகுமாரன்**

சில காலத்திற்கு முன்னதாக உலகில் அதிர்ச்சியைத் தோற்றுவிக்கும் தீவிரவாத நாடுகளாகக் கருதப்பட்ட சிரியா, லிபியா போன்ற அரபு நாடுகள் வகித்த இடத்தினை இன்று ஈரானோடு இணைந்து சூடான் இட்டு நிரப்ப முயல்கிறது. முன்னர் சிரியாவிலும், லெபனானிலும் இருந்தஇசுலாமிய அடிப்படை வாதிகள் தீவிரப் போக்கை கடைப்பிடிப்போர் இன்று தமது புகலிடமாக கொள்வது சூடானையே ஆகும். சூடான் ஈரானோடு அதிகம் தொடர்புகளை ஏற்படுத்துவது மேற்குலகத்திற்கு சிறிதும் பிடித்தமில்லாத செயல். தனக்கு ஏட்டிக்கு போட்டியாக தன் சொல் வழி கேளாத நாடுகளை பயங்கரவாத பட்டியலில் சேர்க்கும்அமெரிக்கா அண்மையில் இப் பட்டியலில் சேர்த்த நாடு சூடான். (ஏற்கனவே ஈரான், லிபியா, சிரியா, வடகொரியா இப் பட்டியலில் உள்ளன.) இவ்வாறு பட்டம் சூட்டப்பட்டால் அந் நாடுகளுக்கு தனது உதவிகளை பூரணமாக நிறுத்துவது அமெரிக்காவின் வழக்கம். ஆனால் இது பற்றி சூடான் சற்றேனும் கவலைப்படவில்லை. ஏனென்றால் ஏற்கனவே அது எவ்வித உதவியையும் அமெரிக்காவிடமிருந்து பெறவில்லை. லிபியத் தலைவர் கேணல் கடாபியே இத் திடீர் வளர்ச்சி குறித்து சூடானின் போக்கு குறித்து கவலை கொண்டிருப்பதாக தெரிகின்றது. அல்ஜீரியா எகிப்து, ரியுனிஸ், போன்ற அரபு நாடுகளோ தத்தமது நாட்டு அரசுகளை கவிழ்க்க முயலும் இசுலாமிய மத அடிப்படை வாதிகளுக்கு சூடான் உதவுவதாக குற்றம் சாட்டி வருகின்றனர். எனவே இன்று ஆபிரிக்க கண்டத்தில் பொதுஉடைமை வாதம்,அராபிய தேசிய வாதம் என்கிற கோட்பாடுகளுக்கு பதிலாக அவற்றின் வெற்றிடத்தை சூடான் கோட்பாட்டு ரீதியாக பரப்பும் மத அடிப்படை வாதம் நிரப்பக்கூடும் என்கிற நிலை தோன்றுகின்றது. இவ்வாறாக உலகெங்கும் பலத்த உணர்வலைகளை தோற்றுவிக்கும். சூடானின் இன்றைய நிலை எமது கவனத்திற்குரியதே.

1970களில் சூடான் மேற்குலக சார்பாக அதன் ஆதரவோடு இராணுவஆட்சிபுரிந்த யபார் நிமேரியின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. இங்கு குறிப்பிட வேண்டியது ஆயினும் அவரதுஆட்சி 1985 ஆம் ஆண்டு கவிழ்க்கப்பட்டது. பின் 1989ஆம்யூன் மாதமளவில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ சதிப்புரட்சியின் விளைவாக அப்போது பிரதம மந்திரியாக இருந்த சாதிக் அல் மாதியின் ஆட்சி முடிவிற்கு கொண்டு வரப்பட்டு இசுலாமிய மத அடிப்படை வாத ஆட்சி சூடானில் ஆரம்பமாகியது. அன்று முதல் [சூடான்] ஒரு பரிசோதனைக் களம் ஆகிவிட்டது. இப் புரட்சியை நடத்தியவர் ஜெனரல் ஓமர் கசன் அல் பசீர் என்கிற இராணுவத் தளபதியே. இவர் பெயரளவில் தலைவராக இருந்த போதும் ",தேசிய மீட்புப் புரட்சி" என இவர்கள் அழைக்கும் இந்த ஆட்சி மாற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர். இன்று மேற்குலகம் கடுமையாக வெறுக்கும் கசன் துறாபி (Hassan Turabi) என்கிற இசுலாமிய அறிஞர் ஆவார். இவர் ஈரானிய மதத் தலைவர்களைவிட சற்று வித்தியாசமானவர். நவீனமானவர். மேற்குலகில் புகழ்பெற்ற சேர் போண் இலண்டன் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர். இசுலாமிய தேசிய முன்னணி என்கிற அமைப்பை உருவாக்கி அரபுலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி வரும் இவர் மக்களால் கவரப்படக் கூடிய ஆற்றல், ஆளுமை வாய்ந்தவர். இன்று சூடானை முழுமையான இசுலாமிய மயமாக்கலில் குறிப்பிடத்தக்க வெற்றியை இவர் பெற்றுள்ளார். முழுமையான இசுலாமிய மதக் கோட்பாடு சட்டமான 'சரியத்' இன்று சூடானில் நடைமுறையில் உள்ளது. இதன் பொருள் ஒவ்வொரு சூடானியரும் இசுலாமிய அடிப்படையிலேயே வாழ வேண்டும் என்பதாகும். சூடானில் மட்டுமல்ல, ஏனைய பகுதிகளிலும் இவரது செயற்பாடுகள் பரவுகின்றன. இதனால் ஏற்கனவே அரபுலகிலஎகிப்தும், அல்ஜீரியாவும், இசுலாமிய வாதத்தின் பிடியில் சிக்கிவிட்டன. மேற்குலகமோ துறாபியின் கோட்பாடுகள் சனநாயக எதிர்ப்பு, மனித உரிமைகள் எதிர்ப்பு; 'சருவதேசபயங்கரவாதிகட்கு' ஆதரவு என்பதே ஆகும் எனக் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இன்று சூடானில் குறிப்பாக அதன் வட பகுதி மக்களின் வாழ்க்கை முறையே முற்றிலும் மாறிவிட்டது. ஜிகாத் எனப்படும் புனிதப் போர் என்பது அவர்களின் நாளாந்த வாழ்வோடு பிணைக்கப்பட்ட விதியாகிவிட்டது கல்லூரி மாணவர், பேராசிரியர், அரச நிருவாக உயர் அதிகாரிகள் எல்லாருமே எவ்வித உயர்வு தாழ்வு வேறுபாடுமின்றி ஜிகாத்தை தமது இலட்சியமாக வரிக்க வேண்டும். அத்தோடு அதற்காக மக்கள் தற்காப்பு அணியில் இணைந்து போர்ப்பயிற்சி பெற்று தெற்கில் கிறீத்தவர்களுக்கு எதிராக நடக்கும் போரில் கலந்து கொள்ள வேண்டும். அதற்காக இறப்பது மேல் என்று கருத வேண்டும். மாலை வேளைகளில் காட்டூம் நகரில் வெள்ளைநிற மேலங்கி கீழங்கி அணிந்த ஆயுதம் தாங்கிய பயிற்சியாளர்கள் 'ஜிகாத்' என்று கூவிய வண்ணம் போர்ப் பயிற்சி பெறுவது சாதாரண காட்சி இசுலாமிற்கு எதிரியான மேற்குலகிற்கு எதிரான ஜிகாத்- புனிதப் போரை மையமாக வைத்தே இன்று சூடானின் மாணவரிலிருந்து அமைச்சர் வரையிலான சகலரின் செயற்பாடுகளும் ஒரு உந்து விசை நிலையில் வைக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. இசுலாமியமத அடிப்படை வாதம் என்பது வேறொன்றுமில்லை அது அடிப்படையில் ஒரு தற்காப்பு கோட்பாடு என்பதே துறாபியின் வாதமாகும், எந்தவொரு நாடும் தனக்கு முன்னால் சவால்களை எதிர்நோக்காவிட்டால் வளர்ச்சி அடைய முடியாது. என்பது அவரின் இன்னுமொரு வாதமாகும். இதன் விளைவு இன்று மூன்று கோடி சூடானியரில் ஏறத்தாழ எண்பது இலட்சம் மாற்று மத வழிபாட்டினர் எதிர்காலம் இருள் சூழ்ந்தது ஆகிவிட்டது. முப்பது இலட்சம் கிறீத்தவரில் பலர் ஏற்கனவே நாட்டை விட்டு ஓடி விட்டனர். மிக அண்மையில் நாட்டுச் சட்டங்களை மீறியதற்காக கிறீத்தவ பிசப்பொருவர் பகிரங்கமாக கசையடி பெற்றார். போப்பாண்டவரே சூடானில் கத்தோலிக்கரின் நிலை குறித்து பெரிதும் அச்சம் தெரிவிக்கிறார். எது எவ்வாறு இருப்பினும் தமது "இசுலாமிய தற்காத்தல்' நிலையிலிருந்து சற்றும் பிறழ முடியாது என்பதே அல்-பசிரின் நிலையாகும்.

இதுவரை குறிப்பிட்டது சூடானின் வட பாகக் கதை வட பாக அரபு இசுலாமியரின் கதை ஆனால் தெற்கு சூடானின் நிலை வேறு மக்களவேறு பஞ்சம் பசி பட்டினிச்சாவு தலைவிரித்தாடும் பகுதி பட்டினி முக்கோணம் எனப்படும் மேல் நைல்நதிப் பகுதியில் காலையும் மாலையும் உணவு தானியங்களை ஐ.நா.விற்காக போடும் அமெரிக்க ஹேர்குலிஸ் விமான மோட்டிகள் மண்டையோடுகள் சிதறிக்கிடப்பதை வயிறு சூம்பி, தலை பெருத்துசாவின் விளிம்பில் துவளும் பாலரையே காண்பர் தென் பகுதி மக்கள் ஆபிரிக்க இனக் குழுவினர். பெரும்பாலும் கிறீத்தவர்களையும், மற்றும் பல்வேறு சொந்த மத நம்பிக்கைகளையும் கொண்டவர்கள் எனவே இன்று தெற்கிலும் சரியத்தை நடைமுறைப்படுத்தவே புனிதப் போரை இம் மக்கள் மேல் இசுலாமிய அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது. பத்து ஆண்டுகளுக்கு மேலாக சருவ நாசம் விளைவிக்கும் உள்நாட்டுப் போரால் இம் மககள் நாள் தோறும் அழிகின்றனர். போதாக் குறைக்கு ஒன்றுபட்ட தலைமையின்றி குழு மோதல் வேறு. எனவே இன்று ஆறு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இறக்கவும் (சிலர் ஒரு மில்லியன் என்கின்றனர்) 35 இலட்சம் பேர் இடம் பெயரவும், 5 இலட்சம் பேர் சாவின் விளிம்பில் பட்டினியால் துயருறவும் காரணமான போர் 1983-ம் ஆண்டே ஆரம்பமானது. சூடானின் வடபகுதி அரபு இசுலாமியர் தம்மை ஒடுக்குவதற்கு எதிராக அவ்வாண்டு சூடானிய இராணுவத்தில் கேணல் பதவி வகித்த யோன் கராங் (John Garang) என்பவரால் S. P L. A. எனப்படும் சூடானிய மக்கள் விடுதலைப் படை உருவாக்கப்பட்டது. சூடானில் ஒரு மதச் சார்பற்ற அரசை நிறுவி நாட்டை ஒடுக்குமுறைகளிலிருந்து விடுவிக்க வேண்டியே இவர் போராட்டத்தை ஆரம்பித்தார். தொடக்கத்தில் பெரும் வெற்றிகளைச் சந்தித்த போதும் பின்னர் பஞ்சம், இனக்குழு மோதல்களால் இவ்அமைப்பு வெற்றிப் பாதையில் அடிபோட முடியாது போய்விட்டது அதுவும் குறிப்பாக 1989ஆம் ஆண்டின் பின் இசுலாமிய அடிப்படைவாதிகள் இப் போருக்கு புதிய அர்த்தத்தைக் கொடுத்து நைரோபியில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளை இடைநிறுத்திய பின் [இவரது நிலை சிககலுக்கு உள்ளாக்கப்பட்டது.

அண்மைக் காலத்தில் ஜெனரல் அல் பசிரின் இராணுவ நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. விமானத்தாக்குதல், இனப்படுகொலை போன்றவற்றினால் இப்பகுதி மக்கள் நிலை மிக்க மோசமாகிவிட்டதாக இப்பகுதியில் இயங்கும் மனிதாபிமான அமைப்புக்கள் கூறுகின்றன. உலகத்தினால் அறியப்படாத மிக மோசமானதுயர நிலை தென் சூடானில் நிலவுவதாக இவர்கள் கருதுகின்றனர். அதே சமயம் உதவிப் பணிகளை போதியளவு மேற்கொள்ள, போதிய வளங்கள் இன்றி அல்லபடும் இந்த அமைப்புகள் S.P.L.A யில் ஏற்பட்டுள்ள பிளவுகளால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். மூன்று நிவாரண ஊழியர்கள் இதுவரை கொல்லப்பட்டும் விட்டனர். இவற்றின் காரணமாக இப் பகுதிகட்குசெல்ல உதவிப் பணியாளர்கள் அஞ்சுகின்றனர். இதன் விளைவாக இப் பகுதிகளில் மிக மோசமான தொற்று நோய்கள் மிக வேகமாகப் பரவுகின்றன. நாளாந்த இறப்புக்கள் அதிகரிக்கின்றன. இப்பகுதி தாய்மார் தமது குழந்தைகட்கு தாய்ப் பாலைக் கூடக் கொடுக்காமல் ஒளித்து விடுவதைத் தடுப்பதே எமது பெரிய பணி என்கிறார் உதவிப் பணியாளர் ஒருவர்.

இவ்வாறு துயருறும் மக்கள் நிலை SPLAயில் ஏற்பட்டுள்ள பிளவு காரணமாக மேலும் தாழ் நிலையை அடைந்துவிட்டது. யோன் கராங்கின் கொள்கை மற்றும் தலைமைக்கு எதிராக 'நசிர்குழு' எனப்படும் றியக்மசார் (Riak Machar) தலைமையில் இன்னுமொரு குழு உருவாகிவிட்டது. இவர்கள் தென்பகுதி சூடானில்இருந்து பிரிந்து தனி நாடாக்கப்பட வேண்டும் என்கின்றனர். கொள்கை வேறுபாடுகளை விட ஆபிரிக்கக் கண்டத்திற்கு உரித்தான சாபக்கேடான இனக் குழு மோதல் SPLAயிலும தோன்றிவிட்டது. கராங் டிங்கா (Dinka) குழுவையும், மசார் நூர் (Nuer) குழுவையும் சேர்ந்தவர்கள் இன்று இவ் இரு குழுவினரையும் சேர்ந்தவர்கள். ஒருவரை ஒருவர் அழிக்காமல் விடுவதில்லை எனவும், 1993ஆம் ஆண்டு டிங்கா அல்லது நூரின் வெற்றியை தீர்மானிக்கும் ஆண்டெனக் கூறி கடுமையாக தமக்குள் மோதி வருகின்றனர். இதுசூடானின் இசுலாமிய அரசுக்கு சாதகமாகிவிட்டது. அது மட்டுமன்றி இக்குழுவினர் ஒருவரையொருவர் சூடான் அரசின் கைக்கூலிகள் என வேறு குற்றம் சாட்டி நிலைமையை மேலும் சிக்கலாக்கிவிட்டனர். எனவே இப்போது தென்பகுதி கிறீத்தவர்க்கும் ஏனைய குழுவினர்க்கும் எதிரான புனிதப் போராகி அங்கு மக்கள் படையணிகளையும் ஈடுபடுத்தும் அரசு வெகு விரைவில் இம் மாதம் மழைக் காலம் முடிய பெரும் தாக்குதல்களைமேற்கொள்ளத்தயாராகி வருகின்றது. இது தென் பகுதிக் கதை, சோகக்கதை,

ஒரு சில மனிதாபிமான அமைப்புக்களைத் தவிர வேறெந்த உதவியும் கிட்டாத நிலையில் சூடான் இன்று முழுமையாக தனது தேவைகட்கு ஈரானையே சார்ந்து நிற்கின்றது. ஈரானின்குறைந்த விலையில் கிடைக்கும் மசகு எண்ணெய், இராணுவத் தளபாட உதவிகள் ஏனைய பொருளாதார உதவிகள் சூடானை இன்று நிலை நிறுத்த உதவுகின்றன. எனவே இன்று சண் துறாபி "உலகின் இந்தப்பாகத்தில் இசுலாம் என்கிற சக்தியே நிலைத்து நிற்கப் போகின்றது" எனச் சொல்லக் கூடியதாக உள்ளது. இளம் சந்ததியை அணிதிரட்ட ஒரு முகப்படுத்த இச்சக்தியை விட வேறு எதனாலும் முடியாது என்று கூறும் இவர் 'சமயத்தாலும், பொருளாதாரத்தாலும் ஒன்றையொன்று சார்ந்து நிற்கும் ஒரு இசுலாமிய உலகை உருவாக்குவதே இலக்கு என்கிறார். இவரின் இலக்கு அடையப்படக் கூடியதா இல்லையா என்பது ஒரு புறமிருக்க பிளவுண்டிருக்கும் அரபுலகை ஒருமுகப்படுத்துவது எளிதான பணிபல்ல என்றாலும், அண்மையில் பாலத்தீனிய- இசுரேலிய உடன்பாட்டின் பின்னர் தோன்றப் போகும் புதிய நிலைமைகளில் சூடானின் பங்கு முக்கியமாகப் போவது உறுதி. ஏற்கனவே ஈரான் இந்த உடன்பாட்டை முற்றிலுமாக நிராகரித்துமேற்குலக சதி எனக் கூறிவிட்டது. சூடானும் அவ்வாறான நிலையையே எடுக்கப் போகின்றது.

ஆனால் புதிய இசுலாமிய உலகை உருவாக்க பெண்கள் மீதான இறுக்கமான கட்டுப்பாடுகள், எண்பது இலட்சம் மாற்றுக் கருத்துள்ள மதத்தினரை ஒடுக்க முயலல், உலகிலிருந்து முற்றிலுமாக தனிமைப்படல் இறுக்கமான சமூக பொருளாதார முறைமைகள் எவ்வாறு சூடானுக்கு உதவப் போகின்றது என்பது வரலாறு விடை காண வேண்டிய வினாவாகிறது.


யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

VON RYAN'S EXPRESS

இத்துடன் 'இதயபூமி 1' [மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு] ஒளிவீச்சு காண்பிக்கப்படுகிறது

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மணி,

மாலை 4.00 மணி, 6. 00மணி (சி-7352

அறிமுகம்

# உலக உலா

## பல்துறை சார் மாத இதழ்

உலக உலா பல கட்டுரைகளை உள்ளடக்கிய ஒரு மஞ்சரியாக வெளிவந்துள்ளது. உலக உலா எனும் சமூக அரசியல், விஞ்ஞான தொழில்நுட்ப மாத இதழினூடாக வாசகர்களைச் சந்திப்பதில் பெருமகிழ்வுறுகிறோம் என்று ஆசிரிய குழுவினால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது வெளிவந்துள்ள உலக உலா ஓகஸ்ட், 1993 இதழ் மாத இதழாக உலா வரவுள்ள உலக உலா வரிசையில் முதல் இதழாகும். முகப்புப் படம் இதழுக்கு மகுடம் சூட்டுகிறது. ஆசிரியர் குழுவின் அகிலத்தைத் தேடும நோக்கை அந்த படம் சிக்கலில்லாமல் புரிந்து கொள்ள வைக்கிறது என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

உலக உலா வாசகர்களின் தேடலை நெறிப்படுத்தும் ஒரு நடவடிக்கை. பிரபஞ்சமான சஞ்சிகைகளான நியூஸ்வீக், ஏசிய வீக், ரைம், பார் ஈஸ்ரேன் எக்கனொமிக் ரிவ்யூ, த எக்கனொமிஸ்ட், லைப ஆகியவற்றில் ஆங்கிலத்தில் வெளிவந்த பல கட்டுரைகளை தேர்ந்தெடுத்து இணைத்து உருவாக்கி இந்த இதழ் வெளியாகியுள்ளது. எமது வரலாற்று நிர்ப்பந்த காலப் பின்புலத்தில் அனைத்துலக நோக்குடன் கட்டுரைகள் தமிழ்ப்படுத்தப்பட்டு அச்சுவாகனம் ஏற்றப்பட்டுள்ளமை உலக உலவின் மகாத்மியம். தமிழ் அறிந்தவர்களுக்குப் பருவஇதழ்கள் மூலம உருவாக்கப்படும் வாசிப்புப் பண்பாட்டுக்கு இந்த இதழ் போன்றவைகள் தேவை.

உலக விவகாரங்கள் என்ற தலைப்பில் ஆசியா. ஐரோப்பா, அமெரிக்கா ஆபிரிக்கா ஆகிய கண்டங்களில நடந்த, மற்றும் தற்போதைய முக்கிய விடயங்கள் பற்றிய கட்டுரைகள மொழியாக்கப்பட்டு பத்து முதல் எழுபதைந்து வரையிலான பக்கங்களில இடம்பெறுகின்றன. தமிழ்மக்களுக்கு ஆக் கட்டுரைகள் அன்னை மொழியில் கிடைப்பது மிகவும் கஷ்டம். அந்தத் தேவையை இந்த மொழியாக்கங்கள் ஈடுசெய்கின்றன.

உலக உலா சமூக அரசியல் விடயங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளாமல் வாணிபம், மருத்துவம், விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் ஆகிய துறைகளில் சிறந்த கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து 76முதல் 98 பக்கங்களில் அடக்கியிருக்கிறார்கள். நாம் சமூக பொருளாதார, கலை சார் அரசியல் விடயங்களைவிட விஞ்ஞானத் துறையில்தான் பின் தங்கியுள்ளோம் இதனை உணர்ந்தோ என்னவோ விஞ்ஞானம் மற்றும் மருத்துவக் கூறு




களை விளக்கும் ஐந்து கட்டுரைகளைப் புகுத்தியிருப்பது நல்ல நோக்கமாகும்.

மேலும் உலக உலா விஞ்ஞான அரசியல் பிரச்சினைகளில முழுமையாக கைநனைத்துக்கொள்ளாமல் பல்திணைப் பகுதியில் புதியன அறிமுகம், செய்திச் சாரம், பார்வைகள் ஆகியவற்றைச் சேர்த்துக் கொண்டது சிறப்பான அம்சமாகும்.

ஆசியா என்ற தலைப்பில் எல்லையில் இரத்தம், இனச்சுத்திகரிப்பு, துணிகரமான புதிய உலகம், பயங்கரவாதத்தின் தொட்டில், சீனவிவசாயிகள் சினமடைந்துள்ளனர். சமாதானத் திருப்பம், ராபினின் சங்கநாதம், அமைதியை நிலைநாட்டுவது யார்? ஆகிய மொழியாக்கங்கள் இடம்பெற்றுள்ளன எடுத்துக்காட்டாக இனச்சுத்திகரிப்பு என்ற பதத்தின் பொருட்செறிவைப் பற்றியும் அதன் நடைமுறைகள்குறித்தும் சரியான கண்ணோட்டத்தைப்பெற இக்கட்டுரை உதவுகிறது. கம்போடியாவைக் கம்போடியருக்கான நிலமாக மாற்றும் கமரூச்சினரின் தொடர் முயற்சியை - அதன் முக்கியத்துவத்தை இக்கட்டுரையில் தேர்ந்து தெளியலாம்.

ஐரோப்பா என்ற பகுதியில் ஐரிஸ் படைகள் தப்பிவிடும் போது, சிறேபிறெனிக்காவை இழந்தது யார்? பிரிய வேண்டிய நேரம். கீவ்: ஆயுதக் கைமாற்றம், நாடகத்தின் பின், மேற்குக்கு கையசைப்பு, பற்பல வெள்ளிச்மாரி என்ற ஏழு கட்டுரைகளை வரிசைப்படுத்தலாம் இக்கட்டுரைகளின் மொழியாக்கம், உள்ளடக்கம் பற்றி அளவிடப் போவது எனது நோக்கமல்ல. கட்டுரைகள் அண்மைக் காலத்தில் எழுதப்பட்டவை. அன்னை மொழி மட்டும் தெரிந்தவர்கள் ஐரோப்பிய விவகாரங்களைப் பற்றிய பரிச்சயமின்றி இருக்கக் கூடாது என்ற எண்ணத்துடன் முன வைக்கப்பட்டுள்ள கட்டுரைகள் இவை. தமிழ் வாசகர்கள் கட்டுரைகளை படித்துப் பயன் பெறலாம்.

அமெரிக்காவின் கோலத்தை உள்ளடக்கிய பகுதியில் சி. ஐ ஏ இன் புதிய ஒற்றர்கள, கிளின்ரனைப் பற்றிய உலகக் கணிப்பீடு. உலகளாவிய காவற்தொழில். உண்மை வெளிவருகிறது என்ற நான்கு கட்டுரைகள் வெளியாகி உள்ளன இக்கட்டுரைகள் அமெரிக்காவின் பரிமாணத்தை இனம்கண்டு கொள்ள உதவுகின்றன.

அங்கோலாவில்பக்க மாற்றம புதிய நாட்டின் உதயம், மரணம சற்று ஓய்வெடுக்கிறது, தென். ஆபிரிக்க வில் அரசியல், இம்சை குறைகிறது ஆகிய தலைப்புகள் ஆபிரிக்கா பற்றிய கணிப்புகளைத் தருகின்றன. பக்கங்களில் உள்ள பந்திகளில் பல கருத்துகள் பிரஞ்ஞையுடன் முன்வைக்கப்பட்டுள்ளன. கருத்துகளுடன் வாசகர்களுக்கு உடன்பாடு ஏற்படாது போனாலும ஆழமான சிந்தனை, விசாரங்கள் உருவாகும் வாய்ப்புகள் ஆபிரிக்க பற்றிய கட்டுரைகளைப் படிப்பதால் உண்டாகும் என்பது உண்மை.

உலகவிவகாரங்கள் பற்றிய கட்டுரைகளை அவ்வப்போது பல பத்திரிகையில் பார்த்திருந்தாலும் இவற்றில் பல வற்றை ஒரு தொகுப்பாக படிக்கும் வாய்ப்பை உலக உலா தந்திருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. மேலும் உலக விவகாரங்கள் பற்றி முறையே படிக்க விரும்பும் அரசியல் விஞ்ஞான மாணவர்களுக்கு உலக உலா பருவ இதழ் பலன் தரும் என்று நம்பிக்கையாகக் கூறலாம் இப்படிச் சொல்லும் போது கட்டுரையில் உள்ள கண்ணோட்டங்கள் எல்லாம் எல்லோருக்கும் ஏற்புடையவை என்று நான் சொல்லவில்லை. இன்றைய நிலையில் உலகப் போக்கின் தன்மைகளை ஓர் இதழில் (வரப்போகும் இதழ்களிலும்) ஒருமைப் படுத்தித் தருவதால் பல பிரச்சினைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு உலக உலா ஒருவாய்ப்பளிக்கிறது.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய முயற்சி உலகஉலா. எனக்குத் தெரிந்த வரையில் தமிழில் மொழியாக்கங்களைக் கொண்ட ஒரு இதழ் - அதுவும் சமூக, பொருளாதார, அரசியல், விஞ்ஞான தொழில்நுட்ப மாத இதழ் வெளிவருவது இதுதான் முதல் தடவை என்று இனம் காட்டிக் கொள்ளலாம். அந்தவகையில் புகழாரம் உலக உலாவிற்குச் சேரட்டும்.

> சிறுகதைகள், கவிதைகள் எல்லாம் தவிர்க்கப்பட்டு ஏறக்குறைய நூறு பக்க அளவில் உலக உலா முதல் இதழ் வெளிவந்துள்ளது. ஆசியா, ஐரோப்பா அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் வாணிபம், மருத்துவம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் பல்திணைப்பகுதி என்று மொழிபெயர்ப்பு ஆக்கங்களைக் கொண்ட ஒரு மாத இதழ் வருவது அநேகமாக இதுதான் முதல்தடவையாக இருக்கும். அந்த வகையில் புகழாரம உலக உலாவிற்குச் சேரட்டும்.

- மதன் -

---

# பதவி வெற்றிடம்

பதவி :- வெளிக்கள உத்தியோகத்தர், தகவல் சேகரிப்பாளர்.

கல்வித் தகைமை :- க. பொ. த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி :- 25-09-93

அனுப்ப வேண்டிய முகவரி: தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
கோட்டச் செயலகம்,
தென்மராட்சி (கொடிகாமம்).

குறிப்பு :- 1) தென்மராட்சிக் கோட்டத்தில் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2) விண்ணப்பதாரிகள் அனைவரும் 28-09 93 காலை 9 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தென்மராட்சி கோட்ட செயலகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குத் தவறாது சமூகமளித்தல் வேண்டும். எந்தப் பரீட்சார்த்திக்கும் தனிப்பட்ட அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட மாட்டாது.

(இ-7429)

---

# 31-ம் நாள் நினைவும் அந்தியேஷ்டி கிரியையும்



கேணியடி, இமையாணன் கிழக்கு
உடுப்பிட்டியைச் சேர்ந்த

அமரர்

## திரு. சின்னப்பொடி தருமலிங்கம்

[புறோக்கர் தருமு]

அவர்களின் 31-ம் நினைவு நாளான இன்று (17-09-1993) காலை 7 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில நடைபெறும் அந்தியேஷ்டி கிரியையிலும், வீட்டுக் கிரியையிலும் கலந்து கொள்ளுமாறு அன்னாரின் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்
அன்னாரின் குடும்பத்தினர்

(6034)

# வியன்னாவில் உலக மனித உரிமைகள் மாநாடு; ஒடுக்கப்பட்டோர் குரல்கள் ஓங்கி ஒலித்தன

உலக மனித உரிமைகள் மாநாடு அவுஸ்திரிய தலைநகரான வியன்னாவில் இவ் வருடம் யூன் மாதம் 14-ம் திகதி தொடக்கம் 25-ம் திகதி வரை நடைபெற்றது. 1968-ம் ஆண்டு ஈரான் தலைநகரான தெகிரானில் நடைபெற்ற பின்னர், 25-வது ஆண்டில் 2-ம் மாநாடு இடம் பெற்றுள்ளது. இம் மாநாட்டை நடத்துவதற்கான ஆயத்தங்கள் பல வருடங்களாக நடைபெற்றன. 1990-ம் ஆண்டு 45/155-ம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம், ஐ. நா. சபை இத்தகு மாநாடு ஒன்றை நடத்துவது என தீர்மானித்தது, பின்னர் 1992 டிசம்பரில், மாநாட்டை என்ன ஒழுங்கில் நடத்துவதென்ற திட்டத் தீர்மானம் ஐ. நா. சபையின் பொதுச்சபையில் நிறைவேறியது. அதே வேளை பிராந்திய ரீதியான ஆயத்தக் கூட்டங்களும் நடந்தன. ஆபிரிக்க பிராந்தியக் கூட்டம் ரியூனிசிலும், தென்னமெரிக்கக் கூட்டம் கோஸ்ராரிக்காவிலும், ஐரோப்பியக் கூட்டம் பிரான்சிலும், ஆசியக்கூட்டம் தாய்லாந்திலும் நடந்தன.

''மனித உரிமைகளை வளர்ப்பதிலும் பாதுகாப்பதிலும் ஐ. நா. சபை புரிந்து வரும்செயற்பாட்டை அளவிடுவதிலும், இவ் விடயத்திலும் ஐ. நா. சபையின் செயற்பாட்டைத் தாக்கமுள்ள தாக்குவதற்கான பரிந்துரைகளை முன வைப்பதுமே உலக மனித உரிமைகள் மாநாட்டின் நோக்கம் என வரையறுக்கப்பட்டது. இம் மாநாட்டை கூட்டுவதற்கான தேவை, சுதேசிய மக்களின் உரிமைகள்( The Rights of the Indigenous Peoples) பெண்கள் உரிமைகள் குழந்தைகள் உரிமைகளின் உரிமைகள் ஆகியயவற்றை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் எழுந்தது என்று கூறிய போதிலும் தேசிய சுயநிர்ணய உரிமையை வரையறுக்கும் அவசியத்தினால் ஏற்பட்டது என்பதே உண்மையாகும்.

21-ம் நூற்றாண்டினுள்காலடி எடுத்து வைக்கும் இக்கால கட்டத்தில், புதிய அரசுகளின் தோற்றத்தை கட்டுப்படுத்துவதும், ஒழுங்கு படுத்துவதும் தடுத்தலுய அவசியமாகுமென மாநாட்டை ஒழுங்கு செய்தோர் கருதியத கவே தோன்றியது. தேசிய இனங்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், அங்கீகரிக்கப்பட்ட அரசினுள்ளே புதிய அரசுகளை தோற்றுவிக்கும் செயல்பாடானது ஏராளம் அரசுகளை தோற்றுவிக்கும் எனவும் இந் நிலையானது. உலக சமாதானத்திற்கும் ஸ்திரத்தன்மைக்கும்குந்தகமானது எனவும், ஆகவே சில வரையறைகளைவகுக்கவேண்டும் என மாநாட்டை நடத்தியோரின் விளைவே இந்த மாநாடு. ஏற்கனவே நிலை நிறுத்தப்பட்ட அரசுகளை அங்கத்தினராகக் கொண்ட ஐ. நா. சபை இத்தகு தீர்மானத்தை எடுத்து, அதை மாநாட்டு வடிவில் நடைமுறைப் படுத்த முயன்றதில் ஆச்சரியமில்லை. காரணம் எற்கனவே நிலை பெற்றுள்ள அரசுகள் எவையும் தம்மிடையே புதிய அரசுகள் உருவாகுவதையே, தமது இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவை பாதிக்கப்படுவதையோ விரும்புவதில்லை. எனவே புதிய அரசுகளின் தோற்றம். இத்தடைகளை உடைத்துக் கொண்டு தீவிரமாக இடம் பெற்றுவரும் காரணத்தினால், இதனைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம் என ஐ. நா சபை. தீர்மானித்ததில் புதுமையில்லை. எனவே, இதனை நடைமுறைப்படுத்துவதற்குரிய பரிந்துரைகளை மேற்கொள்வதற்குக்கூட்டப்பட்ட இம்மாநாடானது, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு. உரிய முக்கியத்துவத்தைக் கொடுக்காததும் பொருத்தமாகவுள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கு இம்மாநாட்டில் பெரும் வரையறைக்குட்பட்டிருந்தது. அரச சார்பற்ற நிறுவனங்கள் குட்டையை குழப்பி விடலாம் என்ற பயம் இருந்திருக்கலாம். எனவே, மாநாட்டுத் தீர்மானத்தை வகுக்கும் குழுவில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இடம் பெறவில்லை அரசு சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் அறிக்கைகள், மாநாட்டுச் செயலரையாடல்களிலும் காணக்கூடியதாக இருந்தது. அவ் வமைப்பு நடத்திய கண்காட்சி பல்லாயிரக் கணக்கானோரை கவர்ந்தது. தமிழ் மக்களின் மீதான இனப்படுகொலை என்ற தலைப்பில் சிறிலங்காவின் அரச பயங்கரவாத நடவடிக்கைகள் பிரசுரங்கள், நூல்கள், படங்கள் என்ற வடிவத்தில் கண்காட்சியாக வைக்கப்பட்டிருந்தன கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தகோரமான மனிதப் படுகொலைப் படங்களைக் கண்டு பலர் கண்ணீர் வடித்ததாக அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டது. அவ்வமைப்பு வெளியிட்ட அறிக்கையில், ஒரு மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையானது ஏனைய சகல உரிமைகளிற்கு அடிப்படையாகவும் ஊற்றாகவும் இருப்பதாகவும், எனவே உலகசமாதானத்துக்கு மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாவின் மரணம் குறித்த கவிதை ஒன்றை வாசித்தார் உலக சமாதான அமைப்பின் முன்னெடுப்பில், 100க்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களால் கைச்சாத்திடப்பட்ட கூட்டு அறிக்கையானது, இலங்கைத் தீவானது இரு அரசுகளாகப் பிரிபடப்போவது நெருங்கி வருவதாக எச்சரித்ததோடு சிறிலங்கா அரசாங்கத்தை பொருளாதாரத்தடையைநீக்குமாறு கோரி இப் பிரச்சினையை மனித உரிமைகளினதும், சுய நிர்ணய உரிமைகளினதும் அடிப்படையில் தீர்க்குமாறு வேண்டுகோள் விடுத்தது.

அமெரிக்க மனிதஉரிமைகள் சட்டத்தரணி திருமதி கரன் பாக்கரின் தலைமையில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று மாநாட்டு மண்டபத்தினுள் நடைபெற்றது. கரன் பாக்கர் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கான

பேசிய ஒரு பிரதிநிதி, ஒடுக்கப்பட்ட, கொல்லப்பட்ட பெண்களை நினைவு கூரும் முகமாக 2 நிமிட மௌன அஞ்சலிசெலுத்தவேண்டும் என்று ஆணித்தரமாக முன்வைத்த போது, மாநாட்டு பிரதிநிதிகள் அனைவரும் எழுந்து மௌன அஞ்சலி செலுத்த முற்பட்டனர். நிகழ்ச்சி நிரலில் இல்லாத இத்திடீர் தாக்குதலைச் சமாளிக்க முனைந்த மாநாட்டுத் தலைவர் அப்பெண்விடுதலை வாதப் பிரதிநிதியின் அறைகூவலை கோரிக்கையாக ஏற்று அதற்கு அனுமதிப்பதாகத் தெரிவித்து அவையின் மௌன அஞ்சலியை ஒழுங்கமைத்தார்.

மியன்மார் நாட்டுப் பிரதிநிதி பேச எழுந்தபோது, அதன் எதிர்ப்பாளர் புதுவித எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றைச் செய்தார்கள். ஜனநாயக ரீதியாக அரசதலைவராக தெரிவு செய்யப்பட்டு இராணுவ ஆட்சியால் சிறை வைக்கப்பட்டிருக்கும் நோபல் சமாதான பரிசு பெற்ற பெண்மணி அவ்சாங்சுங்ஹீயின் முகமூடியை நூற்றுக் கணக்கில் விநியோகித்து, அணியுமாறு செய்தார். நூற்றுக்கணக்கான அவ்சாங்சுங்ஹீக்கள் மண்டபத்தில் நிறைந்திருந்தனர். மியன்மார் பிரதிநிதியின் மனித உரிமை தொடர்பான பேச்சினைக் கண்டிப்பது போல் அவ் எதிர்ப்பு நடவடிக்கை அமைந்திருந்தது.

## ஒரு நேரடி அனுபவம்

கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே அனுமதிக்கப்பட்ட பல பிராந்திய அரச நிறுவனங்களிற்குப்பின்னர் அனுமதி மறுக்கப்பட்டன. அரச எதிர்ப்பால், தலாய்லாமா போன்ற முக்கிய தலைவர்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளிற்கும் பங்கு பற்ற அனுமதி மறுக்கப்பட்டது.

இத்தகைய சூழ்நிலையில், ஒரு தேசிய விடுதலைக்கான ஆயுதபோராட்டத்தை முன்னெடுக்கும் ஒரு விடுதலை இயக்கத்தின் பிரதிநிதி என்ற நிலையில், எமது பங்கேற்பு கயிற்றின் மேல் நடப்பதற்கு ஒப்பாகவே இருந்தது. அரச சார்பற்ற நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டிருந்த ஒரு சில மட்டுப்படுத்தப்பட்ட சலுகைகளைப் பெருமளவு பயன்படுத்தலே எமது செயற்பாடாக இருந்தது.

ரம் அவசியம் எனவும்கூறியது. தென்கிழக்காசிய நாடுகளின் கருத்தரங்கொன்றில் திரு கிருபாகரன் தமிழ் மக்களிற்கெதிரான பொருளாதாரத்தடை என்ற பொருளின் அடிப்படையில் சிறிலங்காவின் மனித உரிமை மீறல்களை புள்ளிவிரங்களுடன் எடுத்துக் கூறினார். கண்காட்சியின் தாக்கம் சிறிலங்கா அரச பிரதிநிதிகளிற்குத் தலைமை தாங்கிய அமைச்சர் அமரதுங்காவைக் கண்காட்சிக்கு வரவழைத்தது. அவுஸ்திரிய தொலைக்காட்சி நிருபர் கண்காட்சியை சுட்டிக்காட்டி, மனிதப்படுகொலை பற்றிக் கேள்வி கேட்டபோது அமைச்சர் அமரதுங்கா அதனை ஒத்துக்கொள்ள நேர்ந்தது ஆயினும் நிலைமை முன்னேறுவதாகத் தெரிவித்தார்.

திரு. அன்ரன் பொன்ராஜா சர்வதேச கல்வி நிறுவனத்தின்

சட்டவலுவையும், கோரிக்கை வளர்ந்த வரலாற்றுத் தொடர்ச்சியையும் எடுத்துக் கூறி தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட தமிழ் மக்கள் இன்னும் எவ்வளவு காலம் பொறுத்திருக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பினார். இம்மாநாட்டில் நான் பேசும் போது, கடந்த 45 வருடகால தமிழ் மக்களின் மீதான ஒடுக்குமுறை, இனப்படுகொலை என்ற வடிவத்தை அடைந்து வளர்ச்சி பெற்று வருகிறதே ஒழியக் குறையவில்லை என்றும், தமிழீழத் தேசியம் நிலைபெற்றுவிட்டது என்றும் அது முன்னேறியே செல்லும் என்றும் தெரிவித்தேன். இவ்வரலாற்றுப் போக்கைத் தடுத்து நிறுத்த முடியாது என்ற ரீதியில வரலாறு மீண்டும் மீண்டும் அரங்கேறிய போதும் அது பின்நோக்கி நகர்வதில்லை என்ற கருத்தையும் முன்வைத்தேன்.

சுதேசிய மக்களின் உரிமைகள் பற்றிய பிரச்சினையும் மாநாட்டில் பெரிதாகக் கதைக்கப்பட்டது. மண்டபத்திற்கு வெளியே அமெரிக்க அஸ்ரெக், அவுஸ்திரேலிய பூர்வீகக் குடிகள் போன்றோரின் நடனங்கள் அட்டகாசமாக இடம் பெற்றன ஆயினும் மாநாட்டு இறுதி அறிக்கையில். சுதேசிய மக்களின் சுயநிர்ணய உரிமை வரையறுக்கப்படாது தவிர்க்கப்பட்டது ஏமாற்றத்தை அளித்தது.

லோறன்ஸ் திலகர்

மாநாடு, சர்வதேச வியன்னா மையம் என்ற மண்டபத்தில் நடந்தது. 6000 க்கு மேற்பட்ட அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மண்டப வாயிலுக்கு வெளியிலே, கூர்த்து மக்கள், சீக்கியர் ஒவ்வொரு நாளும் கூடிநின்று, சுலோகங்கள் எழுப்பி, தங்கள் பிரச்சினைகளைத் தெரியப்படுத்தினர். கூர்த்து மக்களின் பிரதிநிதிகள் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தைநடத்திதமது தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு கோரினர். துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து, தமிழீழ மக்களின் போராட்டத்தையும் சிறிலங்காவின் மனித உரிமை மீறல்களையும் வெளிப்படுத்துவதில், தமிழீழப் பிரதிநிதிகளின் பங்கு கணிசமாக வெளியிடப்பட்டது. இவ் விடயத்தில் மனித உரிமைகளுக்கான தமிழர் மையம் என்ற அமைப்பின் செயற்பாடுமிகுந்த தாக்கத்தை கொடுத்தது. அவ் அமைப்பின் பொதுச் செயலாளர் திரு கிருபாகரனை பிரசார வேலைகளிலும், கலந்து

சார்பில் மாநாட்டில் கலந்து கொண்டார். அவர் மாநாட்டில் வாசித்த அறிக்கை சிறிலங்கா அரசாங்கத்தின் கருத்தை மறுப்பதாக இருந்தது. அமைச்சர் அமரதுங்கா வசித்த அறிக்கையில் ஒரேயொரு பயங்கரவாதக் குழு தனி இன அரசொன்றை உருவாக்க முயல்வதாக தெரிவித்திருந்தார் இதற்கு பதிலிறுத்த அன்ரன் பொன்ராஜா, சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப் போராட்டம், சர்வதேசசட்ட வரையறைக்குள்ளும் ஐ.நா. சபையின் பாதுகாப்புச்சபையின் தீர்மானத்துக்குள்ளும் அடங்குவதோடு சர்வதேச நீதி மன்றத்தின் தீர்ப்பினாலும் நியாயப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். சுயநிர்ணய உரிமையைக் கோரும் ''மக்கள்'' என்பதற்கு வரைவிலக்கணம், ஐ. நா. சபையின் விசேஷ விசாரணையாளர்களால் தனிஇனக்கூட்டு என்றே வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார் உலக சமாதான அமைப்பின் சார்பில் கலந்துகொண்ட செலவிமான், தென்கிழக்காசிய நாடுகளின் கருத்தரங்கில் கிட்டு

மனித உரிமை மாநாட்டில் மனித உரிமையின் சர்வதேசியத் தன்மை வலியுறுத்தப்பட்டது. இவ்விடயத்தில் உலகம் மேற்குக் கிழக்காகப் பிரிந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. மேற்கு நாடுகளின் கருத்திற்கு மாறாக சீனா, மலேசியா போன்ற நாடுகள் சர்வதேசியத்தன்மை தங்கள் உள் விவகாரங்களில் ஏனைய நாடுகளின் தலையீட்டிற்கு வழிவகுக்கும் என்ற கருத்தை முன்வைத்து நிராகரிக்க முற்பட்டன ஒவ்வொரு நாட்டினதும் கலாசாரப், பொருளாதார வரலாற்று நிலைமைகளிற்கு ஏற்பவே மனித உரிமை அனுட்டிப்புக் கையாளப்பட வேண்டும் என்பது இவற்றின் வாதமாகும். ஆயினும் மனித உரிமையானது சர்வதேச சமூகத்தின் கரிசனைக்கு உட்பட்டதென்றும் நாட்டின எல்லைகளைக் கடந்ததென்றும் எனவே ''மனித உரிமைகளின் சர்வதேசியத் தன்மை சாஸ்வதமானது'' என்பதுமான மேற்குலகின் கருத்தே எடுபட்டு, மாநாட்டு இறுதி அறிக்கையிலும் பிரகடனப்படுத்தப்பட்டது.

மேலும், பெண்கள் உரிமைகளிற்கும் அதிமுக்கியத்துவம்கொடுக்கப்பட்டது. பெண்கள் உரிமைகள் குறித்துப்

பொஸ்னியா ஹெலிகோவினா நாட்டு வெளிவிவகார அமைச்சரின் உருக்கமான உரை இடம் பெற்றது. சர்வதேச சமூகத்தின் இரட்டை வேடத்தை அவர் சாடினார். சில நூறு மைல் நீள தூரத்தில் ஓர் இனப்படுகொலை நடைபெறுவதைச் சுட்டிக் காட்டி, அதை நிறுத்தமுடியாமல் ஒரு மாநாடு நடைபெறுவதை ஆணித்தரமாகக் கூறி அவ் இனப்படுகொலையை நிறுத்த உடனடி நடவடிக்கைஎடுக்குமாறு தெரிவித்தார் அவருக்கு மண்டபம் முழுமையும் எழுந்து நின்று ஆதரவு தெரிவித்தது. வியன்னா மாநாடு ஐ. நா. சபையின் செயலாளர் நாயகத்திற்கும் பாதுகாப்புச் சபைக்கும் தந்தி மூலம் அறிவித்ததோடு அவ்விடயம் கிடப்பில் போடப்பட்டது.

நிலை நாட்டப்பட்ட அரசுகளுக்குள் உள்ள தேசிய இனங்களின் போராட்டங்களே இம் மாநாட்டிற்கு வழிவகுத்தது என்ற உண்மையின் அடிப்படையில் இவ்விடயம் தொடர்பான பரிந்துரைகள் எவையென்று பார்த்தால் அவை திருப்தியீனத்தை தருவதாக உள்ளது. இப் பரிந்துரை சமாதானத்திற்கோ அல்லது போரிற்கோ வழிவகுக்கும் என்ற சந்தேகத்தையும் தருகிறது. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை குறித்து சர்வ

(8ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# உண்மை உறவுகள்

மணலாறு விஜயன்

சந்திரா குழந்தையின் தலையை வருடிக் கொண்டிருந்தாள். உடல் தணலாய் கொதித்தது கை கால்கள் அசைவற்றுக்கிடந்தன.

நேரம் நடு இரவைத் தாண்டிக்கொண்டிருந்தது சந்திராவால் எப்படித் தூங்கமுடியும், முதல் பிள்ளையை இழக்க அவள் தயாரில்லை. முதல் பிள்ளை பெண்பிள்ளையாக பிறக்கவேண்டுமென்று ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரரை வேண்டியல்லவா பெற்றெடுத்தாள். மூத்த குழந்தை பெண்குழந்தையாக பிறந்தால் வீட்டுக்கு லக்சுமி வந்திருப்பதாக கிராமத்தில் ஒரு நம்பிக்கை.

மின்விளக்கின் ஒளியில் தன் கணவனை நோக்கினாள் சந்திரா. ஆற்றாமை அவள் விழிகளில் தேங்கிக்கிடந்தது.

"சந்திரா, கிழக்கு வெளிக்கட்டுமப்பா குழந்தையை சைக்கிளிலயெண்டாலும் புதுக்குடியிருப்புக்கு கொண்டு போவம்." மனைவியைத் தேற்ற இதைத்தவிர செல்வரத்தினத்துக்கு வேறு வார்த்தைகள் கிடைக்கவில்லை. மனைவிமீதும் பிள்ளைமீதும் அவனுக்கு அளவற்ற பாசம். அவனால் மட்டும் தூங்கமுடியுமா? ... ...

ஆபத்தோ, அவசரமோ பன்னிரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள புதுக்குடியிருப்பு வைத்தியசாலைதான் பிரதான வைத்தியசாலை. கற்சிலைமடுக்கிராமம் மட்டுமல்ல, முல்லை மாவட்ட மக்கள் அனைவருமே அங்குதான் செல்ல வேண்டும் ஓரளவேனும் உயிரை தாக்காட்டக் கூடிய வசதிகொண்ட வைத்தியசாலை அது ஒன்றுதான். உயிர்காக்கும் அதிவேக வாகனம் சைக்கிள் வண்டி மட்டுமே.

ஒணானின் முதுகுபோன்ற வீதிகள் சற்றேனும் அயர்ந்தால் சரணந்தான் மாற்று வழி இடையாறு வீதிமட்டும் பழுதல்ல; பொழுது விழுந்து விட்டால் பாலங்கள் காட்டிலிருந்து றோட்டிற்கு வந்து விடும். ஆறு மணிக்குப் பின் யாரும் தடுக்காமலே வீதித்தடை ஏற்பட்டுவிடும்.

செல்வரத்தினம் கையில் கட்டியிருந்த மணிக்கூட்டினைப் பார்த்தான். நேரம் நான்கினைத்தாண்டியிருந்தது கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எந்தவீட்டிலும் வெளிச்சம் இல்லை. அயல் வீடுகளில் உதவிக்கு கேட்கக்கூட ஒரு மனிசரில்லை. அதன் பின்னே ஒரு மர்மக்கதையுண்டு. வேறொன்றுமில்லை. விடிந்ததும் தமிழீழ மாவீரர் தினம்.

நேற்றைய தினமே வீதிகள் அலங்கரிக்கப்பட்டுவிட்டன. நேற்றுக் காலை கறாக்கலக்கியதுபோல இரண்டு 'சுப்பர் சொனிக்' விமானங்கள் கற்சிலைமடுவை சுற்றி ஒருகலக்கு கலக்கி விட்டுப் போய்விட்டன.

''விடிஞ்சதும் விடியாததுமாய் நாளைக்கு வருவான்; இண்டைக்கு சும்மாய் சுத்திப் போட்டுப் போனவன் நாளைக்கு சும்மாயாவிடப்போறான். றோட்டுக்கரை வீடுகளுக்குக் கட்டாயம் அடிப்பான்'' என்று கிராமமே பேசிக் கொண்டது.

ஆண்மையையும் இருள்வரை காத்திருந்த மக்கள் மூட்டை முடிச்சுக்களுடன் வீட்டைக் காலி செய்திருந்தனர். செல்வரத்தினம் வீட்டில் மட்டும் வெளிச்சம் தெரிந்தது அவனால் இடம்பெயர முடியாது பனிக்குளிரும், மழைக்குளிரும் ஏற்கனவே பாதிப்புற்றிருக்கும் தன் குழந்தைக்கு இயமனாகி விடுமென்பது அவனுக்கு தெரியும்.

விடிந்தது.

செல்வரத்தினம் சைக்கிளைத் தயாராக்கினான் குழந்தையைத் தொங்கல் சீலையால் போர்த்திக் கொண்டு சைக்கிளில் ஏறினாள் சந்திரா.

கற்சிலைமடுக் கிராமம் அமைதியில் மண்டிக்கிடந்தது. சனநடமாட்டம் எதுவுமில்லை. மனிதபுகாரிகள் கிராமத்தில் கோலம் வரைந்திருந்தன. வெப்பத்தைத் தேடி மாடுகள் வீதியில் கிடந்தன. மாடுகளைப் பட்டியிலடைக்க யாருமில்லை. சொந்தக்காரரைத் தேடி நாய்கள் அலைந்தன.

செல்வரத்தினம் சைக்கிளை அவசர அவசரமாக மிதித்தான். ஐந்நூறு யார் தூரந்தான் சென்றிருப்பான். காலை அமைதியைப் பிளந்துகொண்டு வந்த பேரிரைச்சல்...

''சுப்பசோனிக் வந்திட்டான்.'' சந்திராவின் குரலிலும், உடலிலும் நடுக்கம் அதிர்ந்தது. சுப்பசோனிக் குண்டுவீச்சுக்காக செல்வரத்தினம் பதுங்கியிருக்கத் தயாரில்லை அவன் கண்ணிலும், நெஞ்சிலும் குழந்தையின் முகம் மட்டுமே தெரிந்தது.

''ஐயோ... குத்துறானே தான்..''

அடுத்தகணம் பேரிரைச்சலோடு வெடித்த குண்டு....?

சந்திரா கணவனின் காலினை இறுகப் பிடித்தாள். பிடியையும் மீறி ரத்தம் பெருக்கெடுத்தது குழந்தையோடு கணவனையும் தன்னோடு அணைத்துக் கொண்டாள்.

தன்னை அணைத்துக் கொண்ட மனைவியின் மார்பிலிருந்து குருதி கொப்பளிப்பதைக் கண்ட செல்வரத்தினம் பதறிப் போனான். உலகமே இருள் சூழ்வதுபோன்ற பிரமை அவனுக்கு. "சந்திரா... என்னம்மா நடந்தது..."

வெம்பி வெம்பி அழ மனைவியை அணைத்துக் கொண்டான். யாருக்கு யார் ஆறுதல் சொல்வது?

நீண்டுகிடந்த வீதியில் திசை மாறி ஓடும் நாய்களைத் தவிர வேறு எவரையும் காணவில்லை.

"அத்தான், அழாதேங்கோ. ... கடவுள் உங்களை என்னட்டயிருந்து பறிக்கமாட்டான்; பறிக்கவிடமாட்டன்''...... தடுமாறி வெம்பி வெடித்தது சந்திராவின் வார்த்தைகள். மனைவியின் கண்ணீரைத்துடைத்தபடி "அழாதேம்மா...... உன்னை நான் எப்படியும் காப்பாற்றிப் போடுவன்'' ஆறுதல் மட்டுமே சொல்ல முடிந்த செல்வரத்தினத்தால் எழுந்திருக்க முடியவில்லை.

வீதியைக் கண்கள் துளாவு கின்றன தூரத்தே... வாகனமொன்று வேகமாக வந்து கொண்டிருந்தது. செல்வரத்தினத்தின் மனதில் மெல்லிய நம்பிக்கை ஒளி... ...

வாகனம் நெருங்கி விட்டது. கையை மேலே உயர்த்தி அசைத்தான். வாகனம் நின்றது. தப்பாக்கிகளோடு ... ... எங்கட பிள்ளையள்தான்; சுப்பசோனிக் விமானத்தையும் எதிர்த்துவர அவர்களால் தானே முடியும் அன்புக்கு... உறவுக்கு ...... உதவிக்கு ...... எல்லாமே இவர்கள் தானா?... சொந்தங்களெல்லாம் ஓடிவிட தெய்வங்கள் போல் வந்து....

துயரத்திலும் சில உண்மைகளை செல்வரத்தினம் உணரத் தொடங்கினான்.

வாகனம் புதுக்குடியிருப்பு நோக்கி பறந்து கொண்டிருந்தது. கண்கள் செருகிக் கொண்டிருந்த சந்திராவின் கை குழந்தையினையும். தடவிப்பார்த்து மூடும் விழிகளின் சத்தத்தால் தோய்ந்த குழந்தையும் கணவனும் தெரிந்தனர். ஏதோ பேச நினைத்தாள் ... ... உதடுகள் மட்டும் அசைந்தன.

வைத்தியசாலைக்குள் வாகனம் நுழைந்தது. அவசர சிகிச்சைப் பிரிவில் மூவரும்...

சந்திராவின் நிலை கவலைக்கிடம் பக்கத்துக் கட்டிலில் கிடந்த செல்வரத்தினம் குளுக்கோஸ் பைப்பிலை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்

மீண்டும் ஒரு பேரிரைச்சல்... சுப்பர்சொனிக் வந்திட்டு, வந்திட்டான் பாவி.. ... வந்திட்டான் பாவி ...... மக்கள் பாதுகாப்புத்தேடி ஓடினர். சில கணத்தில் வைத்தியசாலை கூட வெறுமையாகியது

''இயமன் பின்னாலேயே வந்து விட்டானா?''......செல்வரத்தினத்தின் மனம் சொல்லிக்கொண்டது.

மனைவியையும்குளுக்கோஸ் பைப்பையும் மாறிமாறிப் பார்த்தான். பம்பியின் இயக்கம் குறைந்து கொண்டுவருவதை புரிந்து கொண்டான். எழுந்திருக்க முயன்றான் முடியவில்லை.

சந்திரா! ...... சந்திரா!......

அடித்தொண்டைக்குள்ளிருந்து வெளிப்பட்ட அவனது அழைப்பு அவளுக்கு கேட்டிருக்குமா?... குளுக்கோஸ் பம்பி நின்றுவிட்டது.

சந்திரா?......அவள் இனிப் பேசமாட்டாள்.நெஞ்சை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டான் செல்வரத்தினம்.

''அழாதேங்கோ அத்தான்; கடவுள் என்னட்டையிருந்து உங்களைப்பறிக்கமாட்டான்; பறிக்கவிடமாட்டன்'' என்று அவள் சொன்ன கடைசிவார்த்தைகள் மீண்டும் மீண்டும் எழுந்து நெஞ்சில் மோத ... .. தலையை இருகரங்கள் வருடின அண்ணாந்து பார்த்தான். ... துப்பாக்கியோடு வந்த அதே கரங்கள்......

செல்வரத்தினம் அவர்களின் கரத்தை இறுக்கப்பற்றிக் கொண்டான். அவனுக்குத் தெரியும். "இவர்கள் ஓடாத உறவுகள்.. துன்பத்தில் பக்கத் தேவரும் அன்பின்வடிவங்கள். இவர்களின் கரத்தின் முன்னே சுப்பசோனிக்கின் இரைச்சல் ஒரு நாள் ஓயும்" உண்மை உறவுகள் இவர்கள்......

(யாவும் கற்பனையல்ல)

## கடிதம்

நீண்டதோர் தொலைவில்
தேசத்தின் மடியிலிருந்து
உறவுகளின் உணர்வாய்
நீண்டதோர் கடிதம்
வரிவரியாய் என் முகவரிக்கு
கண்ணுற்றேன் பிறகென்ன
கண்களின் ஓரத்தில் கசிவுகள்
இருப்பினும் மறைக்கின
தேசத்தின் ஓரத்தின் கசிவுகள்

என்வரவினை எதிர்பார்த்து
அக்காவின் திருமணம் குழம்பியதாம்
என்வரவினைப்பார்த்தே
அம்மாவின் உடல் நலிந்ததாம்
இப்போதும் அப்படித்தானாம்..

என்னுடன் கூட உறங்கும் தம்பியும்
இடையிடையே விழிப்பானாம்
மறைந்த நினைவுகளை மீட்பானாம்
தெருநாய்களின் சத்தம்
இரும்புப்பாதத்தின் ஓசை
தம்பியை உறங்க வைக்குமாம்
இவனுடன் ஊரையும் தானாம்
எனது அக்காவோ
"இதுதான் உனது மாமா" என
புகைப்படத்தைக்காட்டியே
குழந்தையை வளர்க்கிறாளாம்
குழந்தையோ மாமா எங்கே
என்கிறதாம்

பள்ளிக்கு கொண்டு செல்ல
யாருமில்லையாம் தனக்கு
பாவம் என் தங்கை ஏதுமறியாதவள்
இருப்பினும் சில அண்ணாக்களின்
வரவு நிம்மதியைக் கொடுக்குமாம்
எனக்கும் அப்படித்தான்

அருகிலே பற்றைகள் சரசரத்தன
உணர்வுகளைச்சிறைப்படுத்தினேன்
உறுதியானது இதயம்
கையிலிருக்கும் கருவிபோலவே-
ஏனெனில்
காலப்புயலில் அள்ளுப்பட்ட
வெறும் குப்பையல்ல நான்
காலப்புயலில் அல்லல்பட்ட
தேசத்தின் புதல்வன் நான்

-நாவலன்

அகில இலங்கை பரஸ்பர சகாயநிதிச்சங்கம் [வரையறுள்ளது]
தபாற்கந்தோரடி – வட்டுக்கோட்டை

பதவி வெற்றிடம்

கணக்காளர்

மேற்காண் பதவிக்கு யாழ் மாவட்டத்தில் வசிப்பவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
சம்பளத்திட்டம்:- 1500–2750
10 x 50—10 x 75
(மற்றும் சங்கத்தால் அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்)
வயதெல்லை:- 30 09-93 அன்று 40 வயசிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்


தகைமைகள்:-
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வர்த்தக பட்டதாரி தகைமை சான்றிதழ்
அல்லது
பட்டயக் கணக்காளர் பரீட்சையில் இடைநிலை தேர்வுச் சான்றிதழ்
அல்லது
C. I. M. A பரீட்சையின் பகுதி II இல் சித்திபெய்திய சான்றிதழ்
அல்லது
இலங்கை தொழில்நுட்ப கல்லூரியில் கணக்கியல் டிப்ளோமா தேர்வில் சித்திபெய்திய சான்றிதழ்
அல்லது
க. பொ. த (உயர்தரம்) கணக்கியல் உள்ளடக்கியதாக 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் வங்கியில் அல்லது நிறுவனமொன்றில் (கணக்கியல்துறையில்) இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்.

விண்ணப்ப முடிவு திகதி:- 30-09-1993

விண்ணப்பங்கள் யாவும் சொந்தமாக தயாரிக்கப்பட்டு "செயலாளர்" அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் வரையறுள்ளது. தபாற்கந்தோரடி, வட்டுக்கோட்டை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும் விண்ணப்பங்களுடன் தகைமை சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ் வதிவிடச்சான்றிதழின். புகைப்படப் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும் முடிவு திகதிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். சங்க நடைமுறைக்கேற்ப ரொக்கப்பிணைசெலுத்த வேண்டும்.

14-9 93 (சி-7420) பொதுமுகாமையாளர்

# அன்பைத் தேடும் அனாதரவான வயோதிபர்கள்



**சாந்தி நிலையம்**

பராமரிக்க எவருமில்லாத எதிர்காலத்தை மனச் சஞ்சலத்துடன் நோக்கும் வயோதிபர்களின் வாழ்வில் ஒளியேற்ற அமைக்கப்பட்ட வயோதிபர் இல்லம். பெற்ற பிள்ளைகளால் கவனிப்பாரற்று விடப்பட்டோர், பிள்ளைகள் வெளிநாடுகளுக்கு சென்றுவிட, தனிமையில் மனம் வெதும்பி வாடுவோர், உழைத்து வாழ முடியாத உடல் நிலையில் வாழவழி தெரியாது தடுமாறியோர் எனப் பலதரப்பட்ட வயோதிபர்களுக்குப் புகலிடமாகக் கடந்த 40 வருடங்களாக கைதடியில் இயங்கிவரும் இல்லத்திற்கு அண்மையில் சென்றிருந்தோம். முதியோர்களிடம் உரையாடி அவர்களிடமிருந்து பெற்ற தகவல்கள் எமது சமூகத்திற்கு ஒரு பாடமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

அமைதியானசூழலில் அலைபாயும் எண்ணங்களுடன் ஆழ்ந்திருந்த இவர்களுக்கு உணவு கிடைக்கிறது; உடை கிடைக்கிறது; உறைவிடமும் கிடைக்கிறது. ஆனால், இவர்களுக்கு இதெல்லாம் இரண்டாம் பட்சந்தான். இவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம் தங்கள் ஆழ்மனங்களிருந்து எழும் பாச உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள, வாழ்க்கை ஓட்டத்தின் விளிம்பிலாவதுதங்களில் அன்பு செலுத்த தயாரானவுள்ள ஆதரவான ஆத்ம ஜீவன்கள். ஆதரவாக இரு வார்த்தைகள் கதைத்த லேகண்களில் நீர்படர வஞ்சையுடன் முகம் மலரும் உள்ளங்கள். ''உங்களைப் பற்றிச் சொல்லுங்கோ?'' என்று கேட்டவுடனே உடல் பதற, உதடுபிதுங்க தங்களின் கடந்த கால நினைவுகளை நெஞ்சு கொள்ளாத் துயருடன் உரையாடி வெளியிட்ட கனத்த நெஞ்சங்கள். இவர்களைச் சுமையென நினைத்து பெற்ற பிள்ளைகள் ஒதுக்கலாம், உறவினர்கள் வெறுக்கலாம். ஆனால் உணர்வுள்ள சமூகம் இவர்களை சமூகத்தின் ஒதுக்கப்பட்ட கூறுகளாக எண்ணக் கூடாது என்றஆதங்கத்துடன் அவர்களிற் சிலருடன் உரையாடியபோது,

கடந்த 14 வருடங்களாக இவ் இல்லத்தில் வாழும் ஆனைப்பந்தியைச் சேர்ந்த இராசேந்திரம் (வயது 74) இவ்வாறு கூறுகிறார்: 1979 இல் இந்த இல்லத்தில் சேர்ந்து கொண்ட எனக்கு ஆறு பிள்ளைகள். நாலவர் வெளிநாடுகளிலும், இருவர் இங்குமாக இருக்கிறார்கள். மனைவி இருக்கிறார்தான். அவருடன் தொடர்பில்லை வெளிநாட்டில் இருக்கும் ஒரு மகள், முன்பு காசு ஏதாவது அனுப்புவார் இப்போது அதுவும் இல்லை. சென்ற கிழமை மருந்து வாங்குவதற்கு முந்நூறு ரூபாவரை தேவைப்பட்டது. இந்நிலையில் இங்குள்ள மகளொருவருடன் இருக்க எனக்குவிருப்பந் தான். ஆனால் அவர்களுடைய அன்றாட சீவியமே தள்ளாடும் நிலையில் உள்ளது. நான் அவர்களுக்குப் பாரமாயிருப்பது எப்படி?

இவரைப் போலவே, கொக்குவிலைச் சேர்ந்த நாகராசா (வயது 64) என்பவருடைய பிள்ளைகள் ஜேர்மனி கனடா என குடும்பங்களுடன் பறந்து போய்விட, மனைவியை அவரது சகோதரி பார்த்துக் கொள்ள முதுமையின் தனிமையில் வாடுகிறார்.

முருங்கனைச் சேர்ந்த பொ. செபமாலை (வயது 81) அவர் மனைவி இறந்து 25 வருடங்கள் சென்று விட்டன. ஐந்து பிள்ளைகள் இருந்தாலும், இங்கு தங்கியுள்ளேன் எனத் தெரிவித்தார்.

செபமாலை மேலும் கூறுகையில், ஆயுர்வேத வைத்தியம் பெறவந்து இங்கேயே ஆறுவருடங்கள் வரை முன்பு இருந்தேன். இடையில் தான் வெளிநாடு போகப் போவதாகவும், மகளுக்கு துணையாக இருக்க வருமாறும் மருமகனிடமிருந்து கடிதம் வந்தது. சரி என்று மகளோடு கொஞ்சக் காலம் இருந்தேன். ஏதோ பிரச்சினை என்று மருமகனும் இடையில் வந்துவிட மறுபடியும் தேவையற்றவனாகி கடந்த 4 வருடங்களாக மீண்டும் இங்கு தான் எனது வாழ்க்கை ஓடுகிறது.

ஆயுட் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் எழுதுவினைஞராக கடமையாற்றி ஓய்வு பெற்று நிலையத்தில் தங்கியிருக்கும், கிருஷ்ணசாமி (வயது 62) என்பவரின் கதை பரிதாபமானது. இளவயதிலிருந்தே வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட இவர். இதனால் திருமணமும் செய்து கொள்ளவில்லை. சகோதரர்கள் நல்ல நிலையிலிருந்தும் அவர்களிடம் கடமைப்பட விரும்பாததால், நிலையத்தில் தங்கியிருப்பதாக கூறுகிறார். ''வாழ்க்கையில் எந்தப் பிடிப்பும் எனக்கு இல்லை. பிறந்த எந்த ஜீவனும் இறக்கத்தானே வேண்டும். அவ்வகையில் கவலையற்று இருக்கிறேன்'' எனக்கூறி, தான் பணிபுரிந்த ஆவணங்களையும் காட்டினார். வலிப்பு நோயினால், நரம்புகள் பாதிக்கப்பட்டு உடல் நலிந்தநிலையில் நேயினால் அவஸ்தையுற்றவாறே இவர் உரையாடினார்.

> இவர்களைப் பெற்றபிள்ளைகள் ஒதுக்கலாம்; உறவினர்கள் வெறுக்கலாம்; ஆனால் உணர்வுள்ள சமூகம் ஒதுக்க கூடாது. இவர்களின் ஆழ் மனங்களிலிருந்து எழும் பாச உணர்ச்சிகளை புரிந்து கொள்ள, வாழ்க்கை ஓட்டத்தின் விளிம்பிலாவது தங்களில் அன்பு செலுத்த இவர்கள் எதிர்பார்ப்பது ஆதரவான ஆத்ம ஜீவன்கள் தான்-

''கணவர் இறந்தபின், மகனோடு வசித்தேன் மருமகன் புறக்கணிக்கத் தொடங்கவே, தொடர்ந்தும்அங்கிருக்க விரும்பாமல் நானாக விலகிவிட முடிவு செய்தேன் எங்கு போவது என்று தெரியாத நிலையில் இந்த முதியோர் நிலையத்தைப் பற்றி அறிந்து இங்கு வந்துசேர்ந்து கொண்டேன்''. குரல் கலங்க கூறினார், யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைச் சேர்ந்த சரஸ்வதி தம்பிமுத்து (71 வயது) என்னும் வயோதிப மாது.

## நேர்காணல்: ரகுராம்

நிலையத்தை சுற்றிப் பார்த்து வந்தபோது, கொளுத்தும் வெயிலிலும் பற்றைகளை வெட்டி துப்புரவு செய்து கொண்டிருந்த முதியவர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் மட்டக்களப்பு கிரானைச் சேர்ந்த ஆ. இராசையா (67 வயது) என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அந்த வயோதிபரிடம், ''இந்த வேளையிலும் வேலை செய்கிறீர்களே?'' எனக் கேட்டபோது, ''வேலை செய்யுமாறு எவரும் கட்டாயப்படுத்தப்படுவதில்லை விருப்பமுள்ளவர்கள் ஏதாவது உதவி செய்யலாம். அவ்வகையில் சும்மா இருந்து கடந்த காலங்களை எண்ணி கவலைப்பட்டுக் கொண்டிராமல், இப்படி ஏதாவது வேலை செய்து பொழுதைக் கழிப்பதாக கூறினார்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவி சிவராசா வயது (73) ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியர், அப்போதுதான் புதிதாக நிலையத்தில் சேர வந்திருந்தார். ''இரு பிள்ளைகளும்வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டன, கடைசியாக கொழும்பிலிருந்த பேரப்பிள்ளைகளை பிள்ளைகளுடன் சேர்ப்பதற்கென, மனைவியும் கொழும்பில் தங்கியுள்ளார். முன்னர் உறவினர் வீடொன்றில் தங்கியிருந்தேன். அவர்கள் பராமரிப்பது கடினம் எனக் கூறவே, முன்பின் அறிமுகமில்லாத குடும்பமொன்றுடன இருந்தவேளை, அவர்களும் முகம் சுளித்தார்கள் எனது ஒய்வூதியப் பணத்தையாவது தந்து, நிலையத்தின் ஆதரவு தேடி வந்துள்ளேன்'' எனத் தெரிவித்தார் அம்முதியவர்.

வயோதிபர்கள் தங்கியிருக்கும் பகுதிகள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் காணப்பட்டன. பெண்களுக்கெனவும், ஆண்களுக்கெனவும் தனித்தனியான ''வோரீட்''கள் அமைக்கப்பட்டுள்ளன. கடும் சுகவீனமுற்ற முதியோர்களுக்கென தனியான பகுதி அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது இதனைவிட, பரிமாறும் அறையொன்றும், பிரார்த்தனைகளுக்கென தியான அறையொன்றும் அமைந்திருந்ததையும் காண முடிந்தது

இறுதியாக, சாந்தி நிலையத்தின் அனுமதி முறைகள், செயற்பாடுகள், உதவிகள் பற்றி அறிந்து கொள்வதற்காக நிலைய, மேற்பார்வையாளர் திரு கனகேந்திரனைச் சந்தித்து உரையாடிய போது அவர்

1954ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிலையம் இன்று 123 ஆண்கள் 74 பெண்கள் என 197வயோதிபர்களைக் கொண்டுள்ளது சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழியங்கிய இந்நிலையம் கடந்த1 7 93-ல் இருந்து பிரதேச செயலரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. வடக்கு - கிழக்கில் இயங்கும் ஒரேயொரு முதியோர் இல்லம் இதுவாகும் என தெரிவித்த அவரிடம்,

ஆதரவற்ற வயோதிபர்களை அனுமதிப்பதில் கையாளப்படும் நடைமுறைகளைப் பற்றிக் கேட்டபோது -

''பராமரிக்கஎவருமில்லாத, வறுமை மட்டத்திற்குகீழுள்ள 55 வயதிற்கு மேற்பட்ட வயோதிபர்களை அனுமதித்து வந்தோம். ஆனால் சூழ்நிலை மாற்றங்களை கருத்திற் கொண்டு பராமரிப்பற்ற வயோதிபர்களை, அவர்கள் ஒய்வூதியம் பெறுபவர்களாயிருந்தால் உணவுக்கான செலவீட்டைப் பெற்றுக்கொண்டு அனுமதிக்கிறோம். இன்று இங்கு பிள்ளைகளினதோ, உறவினரதோ அரவணைப்பில்லாத வயோதிப தம்பதிகள், கல்யாணமாகாதவர்கள் வயோதிப மனநோயாளிகள் எனப் பலதரப்பட்டோரும் இருக்கின்றனர். அனுமதி வழங்க முன் இயலுமானவரை குடும்ப பின்னணிகளை அறிந்து கொள்ள முயல்கிறோம். நாங்கள் வழங்கும் விண்ணப்ப படிவத்தில் கிராம சேவையாளர். உதவி அரச அதிபர் அல்லது சமூக சேவை உத்தியோகத்தரின் சிபாரிசுகளைக் கேட்டிருந்தாலும், நெருக்கடி கால கட்டங்களில் உடனடி அனுமதி வழங்கவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது'' என அவர் மேலும் தெரிவித்தார்.

''வயோதிபர்களுக்கான பொழுதுபோக்கிற்காக றோட்டரிக் கழகம் புத்தகங்களை வழங்கியுள்ளது. வழிபாட்டிற்காக கிறிஸ்தவ, இந்து ஆலயங்கள் நிலைய வளாகத்தில் அமைந்துள்ளன. இதனைவிட, சமய நிறுவனங்கள் வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளில் பிரசங்கங்களையும் ஆராதனைகளையும் நடாத்தி வருகின்றன'' என்றார் அவர்.

''நிலையத்திற்கானநன்கொடைகள் பணமாக வழங்கப்படும் பட்சத்தில் அது அரச நிதியில் சேர்க்கப்பட்டு காலதாமதத்தின் பின் கிடைக்கப் பெறுகிறது. அதனால் உணவுகளாக, மருந்துப் பொருள்களாக உதவும்படி கேட்டு வருகிறோம். பல பொதுமக்கள் நினைவுதின, பிறந்ததினநிகழ்வுகளையொட்டி வயோதிபர்களுக்கு உணவுஉடை அளித்துஉதவி வருகின்றனர். இதனைவிட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென்ஜோன்ஸ் கல்லூரிகளின் இன்ரறக்ட் கழக மாணவர்களும் சிரமதானப் பணிகளிலும் வயோதிபர்களுடன் உரையாடி அவர்களுக்கு மன மகிழ்ச்சியை அளிப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர்'' என்று அவர்மேலும் தெரிவித்தார்

''வைத்திய சுகாதார நிலைமைகளை அவதானிப்பதற்காக உதவி வைத்திய அதிகாரி ஒருவர் தினமும் இருமணி நேரங்கள் வருகை தருகிறார். எனினும், அவசர உதவிகளுக்கென வயோதிப நோயாளிகளை போதனா வைத்திய சாலைக்குக்கொண்டு செல்வதற்கு வாகனங்கள் எதுவும் இல்லாத நிலை பெரும் குறைபாடாகும்'' எனவும் தெரிவித்தார்.

20 நிரந்தர ஊழியர்களுடன் 35 சமயாசமய ஊழியர்களும் கடமையிலீடுபடுவதாக கூறிய திரு கனகேந்திரன், ''வயோதிபர்களை நாங்கள் எவ்விதத்திலும் கண்டிப்பதோ குறிப்பிட்ட வேலைகளைச் செய்ய நிர்ப்பந்திப்பதோ இல்லை'' எனக் கூறினார். விரும்பினால் உதவிகள் செய்யலாமெனவும் வயோதிபர்களுக்கு உபரியாகக் கிடைக்கின்ற பணத்தில் தங்களுக்கான மேலதிக தேவைகளை பூர்த்திசெய்யவும் முடியும் எனத் தெரிவித்தார். எதிர்வரும் ஐப்பசி1-ந் திகதி தொடக்கம் 7 தினங்களுக்கு வயோதிபர் வாரமொன்றை நிலையத்தில் நடாத்த விருப்பதாகவும், வயோதிபர்களை மகிழ்விக்க கலைநிகழ்வுகளை நடாத்த தொண்டர் நிறுவனங்கள் சிலவும், தனிநபர்களும் ஆதரவளிப்பதாகக் கூறியிருப்பதாகவும் அவர்கூறினார்.

---

## அறிவித்தல்

### 1991-ம் ஆண்டு ஜீ. சி. ஈ. (உயர்தரம்) விசேட பரீட்சை

மேற்படி பரீட்சையினால் பாதிப்படைந்த மாணவர்கள் சார்பில் எம்மால் தாக்கல்செய்யப்பட்ட வழக்கின் பயனாக 36 மாணவர்கள் மேலதிகமாக பொறியியல் பீடத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய துறை மாணவர்களுக்கு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் நன்மை கிடைக்கவில்லை. அதனால் மேலும் வழக்குத் தொடர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது இது சம்பந்தமாகத் தீர்மானிப்பதற்கு கலந்துரையாடல் ஒன்று யாழ். பல்கலைக் கழகத்தில் 20-09-93 மாலை 3-00 மணிக்கு இடம் பெறும்.

இக் கலந்துரையாடலில் பங்குபற்றி உதவும் வண்ணம் பாதிக்கப்பட்ட மாணவர்களையும், பெற்றோர்களையும், கல்லூரி அதிபர்களையும் நலன் விரும்பிகளையும் கேட்டுக் கொள்கிறோம்.

யாழ். இந்துக்கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்,
15-09-93.

இணைப்பாளர்
நடவடிக்கைக் குழுவின் சார்பில்.

(சி-7432)

# தில்லைச் சிவனின் 'நான்' - ஒரு பார்வை

"குண்டடிக்கும்விமானங்கள்
குத்தி மெத்திச்
சுழன்றடிக்க
கண்ட திசை எல்லாம்
காலாட்படை சுட்டுவர
பெண்டு பிள்ளையோடு சில
பெண்களையும் ஏற்றி
மாட்டு
வண்டியிலே அராலித்துறை
வந்து உயிர் தப்பி
விட்டோம்"

தான் பிறந்து, தவழ்ந்து, விளையாடிய ஊரிலிருந்து தப்பி வந்ததன் அனுபவத்தை கவிஞர் இங்கே மெல்லிய சோகத்துடன் வெளிப்படுத்தியுள்ளார்.

"நான்"

சமீபத்தில் வெளியான தில்லைச் சிவனின் கவிதை சுயசரிதையே இந்நூல். தன் வாழ்வின் அனுபவங்களை இந்நூலாசிரியர் இங்கு கோவைப் படுத்தியிருக்கிறார்.

கவிதை வடிவினாக்கப் பட்டுள்ள இந் நூலில் சுவையான - கிடைத்தற்கரிய செய்திகளும் வெளிப்படுத்தப்படுவதைஎம்மால்உணரமுடிகிறது ஆயினும்பதிவுசெய்யப்பட்டுள்ளவற்றில்கவிஞரின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட விஷயங்களே விரவிக்கிடப்பதை அதிகமாக அவதானிக்க முடிகிறது.

குண்டர்களும் சிறிலங்கா
அமைச்சர்களும்
குரக்கர்கள் போல் ஒன்றா
கித் தெற்கு ஆசிக்
கண்டத்தே மிகப்பெரிய
நூல் நிலையம், யாழ்நகரின்
கலைக் கோயில் எரியூட்டிக்
கழித்த போது
விண்டெரியும் தீ நாக்கு
வானத்தை நக்கியெழ
வீங்கு புகை மண்டலத்துள்
மின் விளக்குக் கண்மயங்கி
மண்டுமிருள் மயமாக்கக்
கண்டடிகள் தாங்க
மரணித்தார்; அது கேட்டு
மனம் நொந்தேன்.

எமது தேசத்தை ஆக்கிரமிக்கத் துடிக்கும் சிங்கள ஆட்சியாளரின் ஆதிக்க வெறியையும் அவர்களின் பாதகச் செயலையும் கவிஞர் ஆக்ரோஷத்துடன் இங்கு பாடியுள்ளார்.

இந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், இந்த மண்ணின் அழிவை எண்ணி மன நிம்மதியடைய மாட்டார்கள்.

உண்மைக் கலைஞன் உருகிப் போய்விடுவான். தில்லைச் சிவனின் பாடல் வரிகளில் எமது தேசத்தின் வியர்வையை எம்மால் அடையாளம் காண முடிகிறது.

எமது முன்னோர்களின் முயற்சிகள் புரிகிறது.

பழம்பெரும் கவிஞர்கள், மௌனமாகிவிடல் ஆகாது. இளைய தலைமுறை, கடந்த காலத்தை திரும்பிப் பார்ப்பதற்கு இந்த வகையான எழுத்துகள் உதவும் என நினைக்கிறேன்.

**மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளிவந்த கவிதை சுயசரிதை**

எத்தனையோ மக்கட்காய்
இரங்கிச் சமரகவி
எழுதிக் கொடுத்தநான்
எனக்காக இதை எழுத
சித்தங்கொண் டவனன்றே
தெரிந்த திதன் இடர்கள்
சிந்தித்தால் ஒன்றுமில்லை
எல்லாம் பழங்குப்பை

மொத்தத்தில்பிறந்துவளர்ந்
திறந்தபுல் ஒத்ததனை
மூடிவைத்து. ஆங்காங்கு
முளைத்த சில வித்துகளை
வைத்து என்கதையை
வடித்தேன், படிப்போரின்
வாழ்த்தைப் பெற்றுள்ளம்
மகிழ்வதற்கே.

என்று கவிஞர் தில்லைச் சிவன் தனது கவிதைச் சுயசரிதையின் கடைசி வரியை முடித்துக் கொள்கிறார்.

நினைவுகள் மிக இனிமையானவை தான். 'உயிர் தப்பி வந்த' கவிஞர் தற்போதைய நிகழ்வுகளையும், அவர் ஊரின் நிலைமையையும் இன்னும் கொஞ்சம் அழுத்தமாக பதிய வைத்திருந்தால் நூல் மிக நன்றாக அமைந்திருக்கும்.

அரிய செய்திகள் கிடைக்கின்றன. ஆனால், பொது நிகழ்வுகளை விபரிக்கும் காட்சிக் கூறுகள் இல்லாமலிருப்பது அல்லது மிக குறைவாக இருப்பது இந்நூலின் குறைபாடாகக் கொள்ளலாம்.

'மல்லிகைப் பந்தல்' வெளியீடாக வெளிவந்திருக்கும் இந்நூலில் ஒரு குறிப்பிட்ட காலமாயினும் நாம் இங்கு எப்படி வாழ்ந்தோம் என்கிற செய்தியை அறிய முடிகிறது.

'புத்தகம்' வெளியீடு செய்த முயற்சி பெரியது என்றே சொல்ல வேண்டும்.

வ—தி

## வியன்னாவில்

தேச சட்டப் பாதுகாப்பு மிகத் தெளிவாக வரையறுக்கப்படாத குறையே காணப்படுகின்றது. முன்னைய சட்ட கருவிகளை மீண்டும் வலியுறுத்தியதோடு மாத்திரமல்லாமல் புதிய நிபந்தனைகளை விதித்துள்ளதாகவும் தெரிகிறது. காலனித்துவ அல்லது வேற்று ஆதிக்கத்தின் கீழ் அல்லது, பிற நாட்டு ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள மக்கள் ஐ. நா. சபையின் மனித உரிமைகள் பிரகடனத்தின் சட்டவரையறைக்குட்பட்டவாறு தகுந்த நடவடிக்கை எடுக்கலாமென்றும், சுயநிர்ணய உரிமை நிராகரிப்பானது மனித உரிமை மீறலாகக் கருப்படும் எனவும் மாநாட்டு இறுதி அறிக்கை தெரிவிக்கிறது. அதே வேளை இந் நடவடிக்கையானது ஒரு சுதந்திரமான நாட்டின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு, அரசியல் ஒற்றுமை ஆகியவற்றைப் பாதிப்பதாகவோ இருக்கக் கூடாதுஎனவும்வலியுறுத்துகிறது ஆயினும் மக்களிடையேசமத்துவத்தைபேணும் மக்களின் சுயநிர்ணய உரிமையை மதிக்கும் எவ்வகையிலும் பாரபட்சம் காட்டாது சகல மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கங்களுக்கே இதுபொருந்தும்எனக்கூறப்பட்டுள்ளது ஒருசாதகமான விடயமாகும். இறுதி அறிக்கையில் வேறு ஒரு இடத்தில் சம உரிமைகள் குறித்தும்; சுயநிர்ணய உரிமையைப் பற்றியும் குறிப்பிடும் போது 'சமாதானம்' ஜனநாயகம், நீதி, சமத்துவம், சட்டஆட்சி, ''பலமுகக் கொள்கை, அபவிருத்தி, உயர்ந்த வாழ்க்கைத்தரம், ஒற்றுமை ஆகியவை வலியுறுத்தப் பட்டுள்ளது அரசாங்கங்களால் சுயநிர்ணய உரிமையை மறுப்பதற்கான நிபந்தனைகளாக இவை பயன்படலாம் என்ற அச்சம் தெரிவிக்கப்பட்ட மக்களின் சுயநிர்ணய உரிமையை வரையறுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உலக சமூகம் தள்ளப்பட்டுள்ளது என்பதும்எதிர்காலத்தில் இன்னும்அதிகமாக தள்ளப்படும் என்பதுமே இம் மாநாட்டின் சீரான அம்சமாகும்.


அனித்தா பாடசாலையின்

**பொருட்காட்சி**

- ஆடை தயாரிப்பு
- சமையல் கலை
- உள்ளக அலங்கரிப்பு
- சிகை அலங்காரம்
- கேக் தயாரிப்பு
- மணமகள் அலங்கரிப்பு

உங்கள் கண்ணுக்கும் கருத்துக்கும்
விருந்தாகும் பொருட்காட்சி


காலம் : 19-09-1993 - 21-09-1993
நேரம் : காலை 9மணி - மாலை 6 மணிவரை
இடம் : பூநாறி மரத்தடி,
கொக்குவில்,

(சி-7426)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
03-04-1962

வீரச்சாவு
17-09-1991



**லெப். கேணல் ஐஸ்ரின்**
(சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைத் தளபதி 3ஆவது பொறுப்பாளர்)
**(பொன்னுச்சாமி பாஸ்கரன்)**
தையிட்டி, காங்கேசன்துறை.

திதி : 23-09-93

இவருடன் மணலாற்றில் 17-09-91இல் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஏனைய போராளிகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மஞ்சத்தடி ஒழுங்கை,
இணுவில் கிழக்கு, இணுவில். (6041)
- குடும்பத்தினர்

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் பிறப்பு:
1972 — 09 — 18



வீரச்சாவு:
1990 — 09 — 17

யாழ். கோட்டை முற்றுகையின் போது நேரடி மோதலில் வீரச்சாவடைந்த

**லெப். ரேகா**
(சங்கரப்பிள்ளை சுசிலா)
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

விடுதலை வேள்வியில் ஆகுதியாகிய
வேங்கையே ரேகா - நீ
விதைக்கப்பட்டு ஆண்டுகள் இரண்டு
ஆகியதா? இதை நம்புவதா?

இன்றும் எம் கண் முன்னே...
உன் கையில் இருந்த ஆயுதம்... உறுதி...
அதைப் பற்றிப் பிடித்த ஆயிரம் கரங்கள்...
உன் கனவை நிறைவேற்றி
பெற்றுத்தந்திடும் தமிழீழம்
அப்பா...
நீயும் மகிழ்வாய்... எம்முடன் இணைந்து.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
17-09-1993 (6015)
பெற்றோர், உறவினர்,
நண்பர்கள்.

# ஜப்பான் சக்கரவர்த்தி குடும்பத்திற்கு 'யகுஸா' கிளர்ச்சியாளரின் சவால்!

ஜப்பானில் சக்கரவர்த்தி ஆட்சியை ஒழித்து நாட்டில் ஜனநாயக ஆட்சியை நிலை நாட்டும் நோக்குடன் யகுஸா எனும் கிளர்ச்சியாளர்கள் 40 ஆண்டுகளுக்கு மேலாக போராடி வருகின்றனர்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்பு 1950-ம் ஆண்டிலிருந்து ஓர் சிறு அளவிலான அங்கத்தவர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த யகுஸா கிளர்ச்சியாளர்கள் மத்தியில் இன்று வயது வித்தியாசமின்றி ஆண்கள் பெண்கள் இருபாலாரும் நாட்டின் பல மாநகரங்களிலும் கிராமங்களிலுமாக சுமார் இரண்டு இலட்சத்திற்கு அதிகமான உறுப்பினர்கள் உள்ளதாக டோக்கியோமெற்றோ பொலிற்றன் பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த கிளர்ச்சியாளர்களின் முக்கிய நோக்கம் ஜப்பானின் சக்கரவர்த்தி குடும்பத்தை அழிப்பதும், சக்கரவர்த்தி ஆட்சியை ஒழிப்பதும் நாட்டில் ஜனநாயக ஆட்சி முறையை மக்கள் மத்தியில் கொண்டு வருவதுமாகும்.

இதே வேளை இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஜப்பான் ஈடுபட்டது மிகவும் பாரதூரமானது. யுத்தத்தில் ஜப்பான் ஈடுபட்டிருக்கக் கூடாது என்று ஜப்பானின் 70 வீதமான மக்களும் இந்த யகுஸாக் கிளர்ச்சியாளர்களும் கூறுகின்றனர்.

மக்கள் மத்தியில் பெருமளவு யகுஸாக் கிளர்ச்சியாளர்களுக்கு செல்வாக்கு இல்லாவிட்டாலும் ஜப்பான் இரண்டாம் உலகமகாயுத்தத்தில் ஈடுபட்டதை பெருமளவு மக்கள் விரும்பவில்லை. அத்துடன் சக்கரவர்த்தி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டும் என்பதையும் பெருமளவு மக்கள் விரும்புகின்றார்கள்.

சக்கரவர்த்தியின் குடும்பத்தை ஒழிக்கப்போவதாகவும் இளவரசியை கொலை செய்யப்போவதாகவும் யகுஸாக் கிளர்ச்சியாளர்கள் தொலைபேசி மூலம் மிரட்டியதை அடுத்து அண்மையில் டோக்கியோவில் நடைபெற்று முடிந்த இளவரசி மசாக்கோ ஒவடா திருமணத்திற்கு மூன்று தினங்களுக்கு முன்னதாகவே டோக்கியோ மாநகரத்திற்குள் பிரவேசிக்கும் சகல வாகனங்களும் 24 மணிநேரமும் வீதித்தடை போட்டு ஆயுதம் தாங்கிய பொலிசாரால் பெரும் பரிசோதனை செய்யப்பட்டது.

80 ஆயிரம் விசேட கமாண்டோ பொலிசார் டோக்கியோவின் முக்கிய கேந்திர நிலையங்களில் பாதுகாப்பிற்காக அமர்த்தப்பட்டார்கள். தற்போது சக்கரவர்த்தியின் குடும்பத்திற்கும் இளவரசி, இளவரசருக்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதே நேரம் ஜப்பானின் சர்வதேச மாநகரங்களில் சிவில் உடையில் விசேட பொலிசார் பாதுகாப்புக்காக அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இந்த யகுஸாக் கிளர்ச்சியாளர்கள் ஜப்பானில் வசிக்கும் வெளிநாட்டவர்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் இதுவரை ஏற்படவில்லை ஆனால் இலங்கையைச் சேர்ந்த பிரபல மாணிக்கக்கல் வர்த்தகர் ஒருவர் யகுஸாக் கிளர்ச்சியாளர்களிடம் அதிக லாபம் பெற்று மாணிக்கக்கல் வியாபாரம் செய்தார் என்பதற்காக அந்த வர்த்தகரின், டோக்கியோவில் உள்ள அறைக்குள் புகுந்த யகுஸா கிளர்ச்சிக்காரர்கள் அங்குள்ள பல லட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக்கற்களை அபகரித்துச் சென்றுள்ளார்கள்.

மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான வங்கிகளில், வர்த்தக நிலையங்களில் பணம், நகைகள் ஆகியவற்றைக் கொள்ளை அடித்துச் சென்றுள்ளார்கள். அண்மையில் டோக்கியோ மாநகரில் பல லட்ச ரூபா பெறுமதி மிக்க சுமார் 4 கிலோகிராம் எடை கொண்ட தங்கமீன் ஒன்று அரசாங்கத்திற்குச் சொந்தமான வர்த்தக நிலையமொன்றிலிருந்து இனம் தெரியாத நபர்களினால் கொள்ளையிடப்பட்டுள்ளது ஆனால், அக்கொள்ளையை யகுஸா கிளர்ச்சியாளர்களே செய்திருக்க வேண்டும் என்று டோக்கியோ மாநகர மெற்றோ பொலிற்றன் பொலிஸ் ஆணையாளர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

இந்த யகுஸா கூட்டத்தினர் டோக்கியோ ஒஸாக்கா நகோயா, கைத்தானா, [illegible] யொக்காமா போன்ற சர்வதேச மாநகரங்களில் பெருமளவு யகுஸா கூட்டத்தினர் நாளாந்தம் நடமாடி வருகின்றார்கள்.

யகுஸா கிளர்ச்சியாளர்களிற்கு யார் தலைவர், அவர் எங்கு இருக்கிறார் என்று கூட இன்னும் ஜப்பானிய பொலிசாரிற்கு தெரியாது. இதே நேரம் யகுஸாக் கூட்டத்தில் இருந்து விலகிக் கொண்டவர்களும் பெருமளவு இருக்கிறார்கள். சாதாரணமாக நிராயுதபாணிகளாக யகுஸா கூட்டத்தினரை கார்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் சன நடமாட்டம் மிக்க புகையிரத, பஸ் நிலையங்களிலும் காணக் கூடியதாக இருக்கும். ஜப்பானியப் பொலிசார் யகுஸாக் கூட்டத்தினர் மீது இதுவரை கடும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

ஜப்பானிய தனியார், கூட்டுத்தாபனங்கள், கம்பனிகள், தொழிற்சாலைகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றிலிருந்து மாதாந்த வரிகளை வசூலித்து சக்கரவர்த்தியின் குடும்பம் வாழ்ந்து வருவதால் பெரும்பாலானோர் சக்கரவர்த்தியின் குடும்பத்தை எதிர்த்து வருகின்றார்கள். எப்படியும் யகுஸா கூட்டத்தினர் உள்நாட்டுக் கிளர்ச்சியொன்றிற்கு தூபமிட்டு வருகின்றனர்.


நீண்ட கால இடைவெளிக்குப் பின் மீண்டும் உங்கள் கைகளில்

**ஐஸ்கட்டி**

கடற்றொழிலாளர்களே! இறைச்சி விற்பனையாளர்களே!
குளிர்பான உற்பத்தியாளர்களே!
உங்கள் பொருட்கள் ஐஸ் இன்றி பழுதடைகின்றனவா?

**கவலையை விடுங்கள்!**

புதிய தொழில்நுட்பத்துடன் உங்கள் தேவையை நிறைவேற்றவும்
உங்கள் இல்ல வைபவங்களை குளிர்மையாக்கவும்
உங்களுக்குத் தேவையான ஐஸினைப் பெற நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

**"ஐஸ் தொழிலகம்"**

உதயம் பல்பொருள் அங்காடி கட்டிடத் தொகுதி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம் (இ-7437)



**மலிவு விற்பனை**

பீங்கான், கிளாஸ் வகைகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மின் உபகரணங்கள், அழகு சாதனங்கள், புடவை வகைகள், விளையாட்டுப் பொருட்கள், காகிதாதி வகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் நியாய விலையில் பெற்றுக் கொள்ளவும், பெண்கள், சிறுவர் குழந்தைகளிற்கான தையல் வேலைகளிற்கும்

**எழிலகம்** பசுதி கடை தொகுப்பு
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: ரூபா 500ற்கு மேற்பட்ட கொள்வனவிற்கு பரிசுகள் பெறும் சந்தர்ப்பம் வழங்குகின்றோம்.

(இ-7431)



Patrician Institutes
பற்றீஷன் இன்ஸ்ரிரியூட்ஸ்

தொழில்நுட்ப பயிற்சிநெறிகள்
புதிய பிரிவுகள் 01. 10. 1993 அன்று
காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

- COMPUTER COURSES
- DIPLOMA IN COMPUTER STUDIES (Duration 9 months)
- BASIC AND MS - DOS
- WORD PROCESSING AND MS-DOS
- LOTUS 1-2-3 AND MS - DOS
- d BASE III+ AND MS DOS
- CIVIL DRAUGHTSMANSHIP AND QUANTITY SURVEYING (Duration 6 months)
- SPECIAL ENGLISH CLASSES (Duration 4 months)
- TOEFL (Test of English as a Foreign Language)
- SHORT HAND AND TYPING
- MOTOR MECHANISM - மோட்டார் வாகனம்திருத்துதல் (6 மாதங்கள்)
- MOTOR WINDING - மோட்டார் வைண்டிங் (4 மாதங்கள்)
- ELECTRICAL WIRING - மின்சார இணைப்பு (8 மாதங்கள்)
- GENERAL ELECTRICIAN - ஜெனரல் எலக்ரீஷியன் (4 மாதங்கள்)

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
மேலதிக விபரங்களுக்கு:

பதிவாளர்
பற்றீஷன் இன்ஸ்ரிரியூட்ஸ்
59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

REGISTRAR
PATRICIAN INSTITUTES
59, St. PATRICK'S ROAD JAFFNA
(இ/7434)



**COLLEGE OF NEPTUNES**

**94 DAY CLASSES**

**கலை-வர்த்தக வகுப்புக்கள்**

ஆரம்பம்: 25-09-1993

பொருளியல் - திரு. S. வரதராஜன்
அளவையியல் - திரு. நவம்
தமிழ் - திரு. கணேசலிங்கம்
இந்து நாகரிகம் - செல்வி குமுதினி
இந்து சமயம் - திரு. நமசிவாயக் குருக்கள்
கணக்கியல் - ஏ. பிரபாகரன், அருளானந்தம்
வர்த்தகம் - நாதகோபாலன்.

குறிப்பு: வரையறுக்கப்பட்ட மாணவர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

நெல்லியடி, கரவெட்டி.

(இ-7436)

# தியாகி திலீபன் நினைவுநாள் உண்ணாவிரதம், சிரமதானம்

தியாகி லெப். கேணல் திலீபன் நினைவாக வட்ட ரீதியாக நடை பெற்று வரும் உண்ணா விரதங்கள் நாளை பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

சங்கானை வட்டம் அரசடி வைரவர் கோயில் முன்றலில் மூளாய் சிற்றூர் மக்கள். கோப்பாய் வட்டம் நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோவில் முன்றல், ஆவரங்கால் சிற்றூர் மக்கள் சண்டிலிப்பாய் வட்டம் ஆனைக்கோட்டை மூத்தவினாயகர் கோவில் முன்றல் பண்டத்தரிப்பு சிற்றூர் மக்கள் உடுவில் தெல்லிப்பளை வட்டம் சுன்னாகம் சிவன்கோவில் முன்றல், ஏழாலை சிற்றூர் மக்கள், யாழ் வட்டம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதி யாழ் வர்த்தகர் சங்கம். நல்லூர் வட்டம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதி சுருட்டு தொழிலாளர்/பேக்கரி உரிமை சங்கம் கரவெட்டி வட்டம் சாமியான் அரசடி நெல்லியடி கிழக்கு. நெல்லியடி கரணவாய் மத்தி சிற்றூர் மக்கள் உடுப்பிட்டி வட்டம் உடுப்பிட்டி மத்தி வைரவர் கோவிலடி. வல்வெட்டி, வல்வெட்டி மத்தி சிற்றூர் மக்கள் பருத்தித்துறை வட்டம், அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடி பொலிகண்டி மேற்கு, கிழக்கு, தெற்கு மக்கள் பனைவட்டம், பளை பிரதேச சபை முன் தெ.ப' பொ. உ.வி.க.சங்கம், ப.நோ.கூ.ச. மாசார் சிற்றூர் ஸ்ரீசக்தி கல்வி நிலையம்கொடிகாமம் வட்டம் புகையிரத அருகாமை போர்க்கு, கொடி தொ. வர். சங் என். பி.என். கல்வி. நிலையம் வரணி கல்வி நிலையம் கிருஷ்ணா கல்வி நிலையம்

சாவகச்சேரி வட்டம். மணங்குணாய் பிள்ளையார் கோவில். முன் கோவில் குடியிருப்பு. மட்டுவில் கிழக்கு. தெற்கு, நுணாவில், மீசாலை மேற்கு, திவ்விய ஜீவன சங்கம் நகர சபை மட்டுவில் வடகமலாச வீதி சரசாலை கணேசா வீதி. கைதடி வட்டம், கைதடி சந்திக்கு அருகாமையில் கைதடி, தெற்கு சிற், தெற். ச. ச. நி கல்விக் கழகம், சேகர் கல்வி நிலையம், திவக கோட்டம், நல்லூர் கோவில் முன்றல் தீவக சாம்சன் குடியிருப்பு, அரம்பொன்சன், வித். சரவணை றோ. க. வித்தி.

## சிரமதானம்

சங்கானைவட்டம் சித்தங்கேணி மாவீரர் முன்றல் துப்புரவு பொது மக்கள். சண்டிலிப்பாய் வட்டம், சண்டிலிப்பாய் சங்கானைவீதி துப்புரவு மணிமேகன் ச.ச.நி. உடுவில் தெல்லிப்பழை வட்டம் ஏழாலை மல்லாகம் சந்தை துப்புரவு, செய்தல் சேபன் ச. ச. நிர்வாகிகள். யாழ் வட்டம் கொட்டடி கற்குளம் கற்குளம் சரிசெய்தல் பொதுமக்கள் தீவக கோட்டம், புகையிரத நிலையம், வீதி புனரமைத்தல். தீவக மக்கள்.

---

# ஈராண்டு நினைவஞ்சலி



கருவறை வாயிலிலே: 19 – 08 – 1975

காவியக் கோயிலிலே: 17 – 09 – 1991

## வீரவேங்கை சுருளி
(தெய்வேந்திரம் வசந்தராஜா)

மணலாற்றுப் போரிலே மண்ணிற்கு விதையாகி மாவீரன் ஆகிவிட்ட மறவனே ...... உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்

சதுமலை தெற்கு, —குடும்பத்தினர்
மானிப்பாய். (6035)

---

# ஓராண்டு நினைவலைகள்



அமரர்

## ச. பாலசிங்கம் (பாலா)

(முன்னாள் வாக்கஸ் ஊழியர், உதயன் ஊழியர்)

தோற்றம்: 21. 08. 1940 மறைவு: 28. 09. 1992

திதி: 18. 09. 1993

அன்பும் பண்பும் கொண்ட எம் அன்புத் தெய்வமே.
இவ் உலகில் எம்மை இனிதே வாழ வைத்த அப்பாவே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

844/1 3-ம் குறுக்குத்தெரு உங்கள் பிரிவால் வாடும்
கொழும்புத்துறை மனைவி, பிள்ளைகள்,
(6017) குடும்பத்தினர்.

---

# ஒரே சூலில் பதினைந்து குழந்தைகள்


டென்மார்க்கிலுள்ள ஒரு தாய் ஒரேநாளில் பதினைந்து பிள்ளைகள் பெற்று உலகப் புகழ் பெற்று விட்டார்.

சத்திர சிகிச்சை மூலம் 11 ஆண் குழந்தைகளும் 4 பெண் குழந்தைகளும் ஒரேநாளில் பிரசவமானார்கள்.

குழந்தைகள் இல்லாமல் பல ஆண்டுகள் வாடினார்கள் கிறிஸ்ரன், சொறென் சென் தம்பதியினர். கருவளச்சிகிச்சை கொடுக்கப்பட்டது.

12குழந்தைகளை ஒரே தடவையில் பிரசவித்ததே இது வரை உலக சாதனையாக இருந்தது. இப்போது அந்தச் சாதனையை முறியடித்து உலக சாதனைப் புத்தகமான கின்னசில் இடம் பிடிக்கப் போகிறார் சொறென் சென். சொறென்சனுக்கு வயது 34. இன்னமும் மருத்துவ மனையில் தனது 15 பிள்ளைகளும் புடைசூழ தங்கியுள்ளார், உள்ளூர் தாதிமார்கள் முறைவகுத்து குழந்தைகளைப் பராமரித்து வருகின்றனர்.

---



# சத்திய வேள்வியின் அர்த்தம்


புயலெழுந்ததும் பூமி அதிர்ந்ததும்
பூத்த மென்மலர் தீயெனச் சுட்டதும்
கன லெழுந்ததும் காவியமானதும்
மனங்கள் யாவிலும் உரம்படைத்ததும்
தினந்தினமித் தேசத்தரையினில்
கொடிகள் ஏற்றியே பகையறுத்ததும்
வடிவமாயவன் வளர்த்த சத்தியம்.

நல்லைமாநகர் தொல்வரலாற்றினை
மெல்ல உரைத்திடத் திலீபனைத் தேர்ந்ததோ?
அல்லலுற்ற நம் மக்கள் தம்துயர்
வெல்லும் வேள்வி யொன்றங்குருவானது
கல்லை நிகர்த்த பகைவர் மனங்களை
வெல்ல மாக உருக்கிய தீ இதோ?
சொல்லுவாரென எவரும் இல்லையாம் இத்
தேச மெங்கும் அவன் மனங் கொண்டதால்,
தேசத் தீயெனச் சத்தியம் ஆர்த்தது
தேசஞ் சிவந்தது திக்கதிரானது.

கோட்டை வீழ்ந்ததும் கொடியசைந்ததும்,
நாட்டமாயவன் நாடிநயந்தது
நாளில் நடக்குமென் றாருரைத்தாரிது
வானிலே தமிழ் ஊர்திபறந்திடும், தமிழ்
ஈழமே உருவாக்கு மாமினி!
சூழவேதிசை தொறுவரும் பகை,
ஆழப்புதைப்பமென் றார்த்த சத்தியன்
வேழப் படையுளும் காந்தி நாட்டிலும்,
மோதி விழுந்தது திலீபனின் தீச்சுடர்!
பாதி மதியுடைப் பகைவர் பாடுகள்
ஆதியோடவன் ஆகுதி சொன்னது
கூலிகேட்டவர் கேலி கொண்டோடிட
வேலியான எம் வீரத்திலீபனே! நின்
கொள்கை வென்றிடும் கோலந் தெரியுது
சத்திய வேள்வியின் அர்த்தம் மலர்ந்தது.

-வளவை வளவன்

---


வெலிங்டன் சந்திக்கருகில்!

UNIKCO
COMPUTER CENTRE

Computerபயிற்சிநெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

- BASIC Language (including Graphics, Sound & Files)
- PASCAL Language (பல்கலைக்கழகம் செல்லவிருப்பவர்கட்கு மட்டும்)
- dBASE III PLUS and MS - DOS
- LOTUS 1-2-3 and MS - DOS
- WORD PROCESSING (Word Star Rel. 5.5) and MS - DOS

வார இறுதி வகுப்புக்கள் ஆரம்பம்: 07-09-93 - 8.30 p.m
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம்: 18-09-93 - 8.30 p.m

Equipment Used: ACER, ARC Computers. (IBM Compatibles)

மேலதிக விபரங்களுக்கு:

37, CLOCK TOWER ROAD, JAFFNA

(சி-7399)